𑌸𑌰𑍍𑌵𑍇 𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌪𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌾 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑌾 𑌗𑍁𑌣𑍈𑌃
௨௪ ॥

𑌤𑍇𑌷𑌾 𑌮𑌪𑌿 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌰𑌾𑌮 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃॥
𑌇𑌷𑍍𑌟 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌶𑌶𑌾𑌙𑍍𑌕 𑌇𑌵 𑌨𑌿𑌰𑍍𑌮𑌲𑌃। ௨௫ ॥

𑌗𑌜𑌸𑍍𑌕𑌨𑍍𑌧𑍇 ऽ𑌶𑍍𑌵 𑌪𑍃𑌷𑍍𑌠𑍇 𑌚 𑌰𑌥𑌚𑌰𑍍𑌯𑌾𑌸𑍁 𑌸𑌮𑍍𑌮𑌤𑌃 ॥
𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍇 𑌚 𑌨𑌿𑌰𑌤𑌃 𑌪𑌿𑌤𑍁𑌶𑍍𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌣𑍇 𑌰𑌤𑌃 ॥
௨௬ ॥

கக் கொடுத்தார்.(௨௨ ௭)இப்படி நாமகரணம் தொடங்கி அந்ந ப்ராஸநம் முதலிய மற்ற ஸம்ஸ்காரங்களையும் செய்வித்தார்.

(௨௩ ௭) அந்நால்வரில் மூத்தவராகிய ஸ்ரீராமன் கொடி கட்டினாற்போல் குலத்துக்குப்ரகாசகராய், பிதாவாகிய தசரத மகாராஜனுக்கு மிகஅன்பராய், ப்ரஹ்மாவைப்போல் ப்ராணி களுக்கு ப்ரீதிசெய்யத்தக்கவரா யிருந்தார்.

(௨௪ ௭) எல்லாப்பிள்ளைகளும் வேதாத்யயநம் செய்தார் கள், பராக்ரமவான்களானார்கள்.உலகத்தாருக்கு நன்மைசெய் வதில் ப்ரீதியுடையவரானார்கள். வேதாத்யயநம் செய்ததே யன்றி அதினர்த்தத்தையும் செவ்வையாகஅறிந்தார்கள்,அறி ந்தமாத்ரமன்றிக்கே அதிற்சொல்லியபடி தயை முதலியகுண ங்களையுடையவ ரானார்கள்.

(௨௫ ௭) அவர்களில் ஸ்ரீராமன் பகுப்ரதாபவானாய்,யத்நி த்தகார்யத்தை முடிக்கவல்ல பராக்ரமசாலியாய், களங்க மற்ற சந்திரனைப்போல் உலகத்தாரனைவர்க்கும் ப்ரியமாகப் பார்க்கத்தக்க ஸௌந்தர்ய முடையவரானார்.

(௨௬ ௭) ஆனைமேலும்குதிரைமேலும்தேரின்மேலுமேறி அவற்றை நடத்தும்போது "இவரைப்போல் நடத்தவல்லா ரொருவருமில்லை" என்று எல்லாராலும் புகழத்தக்கவராயிரு ந்தார்.தநுர்வேதத்தைநன்றாயறிந்தவர்.தாய்தந்தைகளுடைய ஶுஶ்ரூஷையில் ஊற்றமுடையவராயிருந்தார்.

𑌬𑌾𑌲𑍍𑌯𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑌿 𑌸𑍁𑌸𑍍𑌨𑌿𑌗𑍍𑌧𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 ॥
𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌭𑍍𑌰𑌾𑌤𑍁𑌰𑍍𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑌃 ॥
௨௭ ॥

𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌿𑌯𑌕𑌰𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌶𑌰𑍀𑌰𑌤𑌃 ॥
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑍋𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌿𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑍋𑌬𑌹𑌿𑌃𑌪𑍍𑌰𑌾𑌣𑌇𑌵𑌾𑌪𑌰𑌃 ॥ ௨௮ ॥

𑌨 𑌚 𑌤𑍇𑌨 𑌵𑌿𑌨𑌾 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌮𑍃𑌷𑍍𑌟𑌮𑌨𑍍𑌨𑌮𑍁𑌪𑌾𑌨𑍀𑌤𑌮𑌶𑍍𑌨𑌾𑌤𑌿 𑌨 𑌚 𑌤𑌂 𑌵𑌿𑌨𑌾 । ௨௯ ॥

𑌯𑌦𑌾 𑌹𑌿 𑌹𑌯𑌮𑌾𑌰𑍂𑌢𑍋 𑌮𑍃𑌗𑌯𑌾𑌂 𑌯𑌾𑌤𑌿 𑌰𑌾𑌘𑌵𑌃 ॥
𑌅𑌥𑍈𑌨𑌂 𑌪𑍃𑌷𑍍𑌠𑌤𑍋𑌽𑌭𑍍𑌯𑍇𑌤𑌿 𑌸𑌧𑌨𑍁𑌃 𑌪𑌰𑌿𑌪𑌾𑌲𑌯𑌨𑍍
௩௦ ॥

𑌭𑌰𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑍋 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌵𑌰𑌜𑍋 𑌹𑌿 𑌸𑌃 ॥
𑌪𑍍𑌰𑌾𑌣𑍈𑌃𑌪𑍍𑌰𑌿𑌯𑌤𑌰𑍋𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯𑌚𑌾𑌸𑍀𑌤𑍍𑌤𑌥𑌾𑌪𑍍𑌰𑌿𑌯𑌃,

𑌸𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑌿𑌰𑍍𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑍈𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌦𑌶𑌰𑌥𑌃𑌪𑍍𑌰𑌿𑌯𑍈𑌃
𑌬𑌭𑍂𑌵 𑌪𑌰𑌮𑌪𑍍𑌰𑍀𑌤𑍋 𑌦𑍇𑌵𑍈𑌰𑌿𑌵 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌃। ௩௨ ॥

𑌤𑍇 𑌯𑌦𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌮𑍍𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑌾 𑌗𑍁𑌣𑍈𑌃 ॥
𑌹𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑌦𑌰𑍍𑌶𑌿𑌨𑌃। ௩௩ ॥

(உஎ) லக்ஷ்மணன், ஸகலலோகங்களுக்கும் அதிப்ரியராய் தனக்கு ஜ்யேஷ்ட்ட ப்ராதாவான ஸ்ரீராமனுடைய விஷயத்தில் பிறந்ததுமுதல் எப்போதும் மிக்கபக்தியையுடையராய் அந்தராமபக்தியாகிற லக்ஷ்மியை மேன்மேலும் வளர்த்திக்கொண்டு விளங்கினர்.

(உஅ) இராமபக்தியாகிற லக்ஷ்மியினல் பரிபூர்ணராகையால் லக்ஷ்மணனென்று பெயரையுடையராய் ஸ்ரீராமனுக்கு ஸமஸ்தப்ரகாரத்தாலும் ப்ரியத்தையே செய்பவராய்க்கொண்டு, அவருக்கு சரீரமெடுத்து வெளியிலே திரிகிற மற்றொரு ப்ராணன்போலே யிருந்தார்.

(உகூ) புருஷோத்தமனுகிய ஸ்ரீராமன் அந்தலக்ஷ்மணனேவிட்டு உறங்கவேமாட்டார், கௌஸலேயார் கொண்டுவந்த ருசிகரமான அந்நத்தையும் அந்தலக்ஷ்மணனேவிட்டுபுஜிக்கமாட்டார்.

(ஙo) ஸ்ரீராமன் குதிரையேறி வேட்டைக்குப் போம்போது, அவருக்கொரு தீங்கு நேரிடாதிருக்கவேண்டுமென்று தான் வில்லேக்கையிலேபிடித்து அவருக்கு நாலுபக்கத்திலும் பாதுகாத்துக்கொண்டு அக்குதிரையின் பின்னே யோடுவார்.

(ஙக) இப்படியே லக்ஷ்மணனுடைய தம்பியாகியசத்ருக்நனும் பரதனுக்கு ப்ராணனேக்காட்டிலும் ப்ரியமாயிருந்தார். பரதனும் சத்ருக்நனுக்கு அப்படியே ப்ரியமாயிருந்தார்.

(ஙஉ) தசரதமஹாராஜன், நான்கு திக்பாலர்களோடு கூடிய ப்ரஹ்மதேவனேப்போல், மஹாபாக்யசாலிகளாய் ப்ரியப்பட்டவர்களான நான்கு புத்திரர்களுடன்கூடி பகுப்ரீதியையுடையராயிருந்தார்.

(ஙங) அந்தப்பிள்ளேகள் தக்கவயஸ்ஸு வந்தவுடனே ஜ்ஞானவான்களாய், ஸகலகுண பரிபூர்ணராய், செய்யத்தகாத காரியத்தைத் தெரியாமல்செய்துவிட்டால்பின்பு "அய்யோ!

𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌵𑌂𑌪𑍍𑌰𑌭𑌾𑌵𑌾𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑌤𑍇𑌜𑌸𑌾𑌮𑍍 ॥
𑌪𑌿𑌤𑌾𑌦𑌶𑌰𑌥𑍋 𑌹𑍃𑌷𑍍𑌟𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌲𑍋𑌕𑌾𑌧𑌿𑌪𑍋 𑌯𑌥𑌾 ।

𑌤𑍇 𑌚𑌾𑌪𑌿 𑌮𑌨𑍁𑌜𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌾 𑌵𑍈𑌦𑌿𑌕𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑍇 𑌰𑌤𑌾𑌃 ॥
𑌪𑌿𑌤𑍃𑌶𑍁𑌶𑍍𑌰𑍂𑌷𑌣𑌰𑌤𑌾 𑌧𑌨𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑍇 𑌚 𑌨𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 ।
௩௫ ॥

𑌅𑌥 𑌰𑌾𑌜𑌾 𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌦𑌾𑌰𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 ॥
𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾𑌮𑌾𑌸 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌸𑍋𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 𑌸𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌃 । ௩௬ ॥

𑌤𑌸𑍍𑌯 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌮𑌧𑍍𑌯𑍇 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 ॥
𑌅𑌭𑍍𑌯𑌗𑌚𑍍𑌛𑌨𑍍𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 । ௩௭ ॥

𑌸 𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑍀 𑌦𑍍𑌵𑌾𑌰𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌵𑌾𑌚 𑌹 ।
𑌶𑍀𑌘𑍍𑌰𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤 𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌂 𑌕𑍌𑌶𑌿𑌕𑌂 𑌗𑌾𑌧𑌿𑌨𑌃 𑌸𑍁𑌤𑌮𑍍 ।
௩௮ ॥

இதைச்செய்தோமே'' என்றுவெட்கித்தவர்களாய், குணவான் களென்று உலகத்தில் புகழ்பெற்றவர்களாய், ஸகலமானலௌகிக வைதிகங்களையு மறிந்தவர்களாய், மேல்வருமவற்றையெல்லாம் முன்னமேயறியவல்லவர்களாயெப்போதானார்களோ அப்பொழுது (ருசு ௭) இப்படிப்பட்ட மஹிமையுடையவர்களாய் விளங்காநின்ற தேஜஸ்ஸை யுடையவர்களாயுள்ள அப்பிள்ளைகளின்பிதாவாகியதசரதமஹாராஜன் அவர்களைக்கண்டு, லோகநாயகனானபிரமதேவனைப்போல்ஸந்தோஷமடைந்தவரானார்.

(ருரு ௭) இப்படி தங்கள் பிதா தங்கள் விஷயமாக ஸந்தோஷிப்பதைக்கண்டு, மநுஜோத்தமர்களாகிய அந்நான்கு பிள்ளைகளும், மற்றும் வேதங்களோடு ஸம்பந்தித்த ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் முதலியவைகளைமென்மேல் அத்யயநம் செய்து, தாய்தந்தைகளுடைய பரிசர்யையில் ப்ரீதியுடையவர்களாய், தநுர்வித்யையிலும் நிபுணர்களானார்கள்.

(ருகூ ௭) பின்பு தசரதமஹாராஜன், வஸிஷ்டமஹாமுனிவரையும் பந்துஜநங்களையும்கூட்டி, இப்பிள்ளைகளுடைய குணங்களுக்கும் வயஸ்ஸுக்கும் குலத்துக்கும்நடத்தைக்கும் சரியான குணாதிகளையுடைய பெண்களை இவர்களுக்கு விவாஹம் செய்விக்கவேண்டுமென்று யோசித்தார்.

(ருஎ ௭) இப்படி மஹாநுபாவனாகிய தசரதமஹாராஜன் மந்திரிகள் நடுவில் உட்கார்ந்து யோசித்துக்கொண் டிருக்குமளவில், ஸகலகார்யங்களையும் தானேசெய்து முடித்துக்கொள்ளவல்ல மஹாதேஜஸ்ஸை யுடைய முனிஶ்ரேஷ்டரான விஶ்வாமித்ரர் வந்தார்.

(ருஅ ௭) அந்த விஶ்வாமித்ரர் தசரதமஹாராஜனைப் பார்க்கக்கருதி த்வாரபாலர்களைப்பார்த்து "நீங்கள் சீக்கிரமாயோடி குசிககோத்ரத்தில்பிறந்த காதியின்பிள்ளையாகிய நான் வந்திருக்கிறேனென்றறிவியுங்கள்'' என்றார்.

𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌵𑌚𑌨𑌂 𑌤𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌵𑍇𑌶𑍍𑌮 𑌪𑍍𑌰𑌦𑍁𑌦𑍍𑌰𑍁𑌵𑍁𑌃
𑌸𑌂𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑌨𑌸𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌤𑍇𑌨 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨 𑌚𑍋𑌦𑌿𑌤𑌾𑌃। ௧௯

𑌤𑍇 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌜𑌭𑌵𑌨𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌮𑍃𑌷𑌿𑌂 𑌤𑌦𑌾 ॥
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌮𑌾𑌵𑍇𑌦𑌯𑌾𑌮𑌾𑌸𑍁𑌰𑍍𑌨𑍃𑌪𑌾𑌯𑍇𑌕𑍍𑌷𑍍𑌵𑌾𑌕𑌵𑍇 𑌤𑌦𑌾। ௨௦

𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌸𑌪𑍁𑌰𑍋𑌧𑌾𑌸𑍍𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃॥
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌜𑍍𑌜𑌗𑌾𑌮 𑌸𑌂𑌹𑍃𑌷𑍍𑌟𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑌮𑌿𑌵 𑌵𑌾𑌸𑌵𑌃 ௨௧

𑌤𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌜𑍍𑌵𑌲𑌿𑌤𑌂 𑌦𑍀𑌪𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑌾𑌪𑌸𑌂 𑌸𑌂𑌶𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌮𑍍॥
𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑌵𑌦𑌨𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌤𑌤𑍋 𑌽𑌰𑍍𑌘𑍍𑌯𑌮𑍁𑌪𑌹𑌾𑌰𑌯𑌤𑍍।
௨௨॥

𑌸 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌘𑍍𑌯𑌂 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌦𑍃𑌷𑍍𑌟𑍇𑌨 𑌕𑌰𑍍𑌮𑌣𑌾 ॥
𑌕𑍁𑌶𑌲𑌂 𑌚𑌾𑌵𑍍𑌯𑌯𑌂 𑌚𑍈𑌵 𑌪𑌰𑍍𑌯𑌪𑍃𑌚𑍍𑌛𑌨𑍍𑌨𑌰𑌾𑌧𑌿𑌪𑌮𑍍। ௨௩॥

𑌪𑍁𑌰𑍇 𑌕𑍋𑌶𑍇 𑌜𑌨𑌪𑌦𑍇 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑍇𑌷𑍁 𑌸𑍁𑌹𑍃𑌤𑍍𑌸𑍁 𑌚
𑌕𑍁𑌶𑌲𑌂 𑌕𑍌𑌶𑌿𑌕𑍋 𑌰𑌾𑌜𑍍𑌞𑌃 𑌪𑌰𑍍𑌯𑌪𑍃𑌚𑍍𑌛𑌤𑍍𑌸𑍁𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕𑌃। ௨௪

𑌅𑌪𑌿 𑌤𑍇 𑌸𑌨𑍍𑌨𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌾𑌮𑌨𑍍𑌤𑌾 𑌰𑌿𑌪𑌵𑍋 𑌜𑌿𑌤𑌾𑌃 ॥
𑌦𑍈𑌵𑌂 𑌚 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌕𑌰𑍍𑌮 𑌤𑍇 𑌸𑌾𑌧𑍍𑌵𑌨𑍁𑌷𑍍𑌠𑌿𑌤𑌮𑍍 ।
௨௫।

(ங௯) த்வாரபாலர்கள் அவர் பேச்சைக்கேட்டு, கொஞ்சம் தாமஸித்தால் இவர் சபித்துவிடுவாரென்று பயந்து, இவர்வரவின் வரலாற்றை யோசிக்கமுடியாதபடிப்ராந்தியுற்றவர்களாய், உடனே அரசனுக்கறிவிக்கஅனைவருமோடினார்கள்.

(௪0) அவர்கள் அரசனுடைய மாளிகையிற் சென்று, தசரதனிடம், விஶ்வாமித்ரர் வந்திருப்பதை யறிவித்தார்கள்.

(௪௧) தசரதமஹாராஜன் அவர்கள் சொல்லைக்கேட்டு ப்ரஸந்நசித்தனாய்க் களிப்புற்று, புரோஹிதருடன்கூட, தேவேந்த்ரன் பிரமதேவனை யெதிர்கொள்வதுபோல், விஶ்வாமித்ரரை யெதிர்கொண்டார்.

(௪௨) தேஜஸ்ஸினால்ஜ்வலித்துக்கொண்டிருக்கிறமஹா பயங்கரமான வ்ரதத்தையுடைய அந்த விஶ்வாமித்ரமஹர்ஷியை தசரதமஹாராஜன்பார்த்து முகமலர்ச்சியுடனே அருகே சென்று அர்க்யத்துக்காக ஜலத்தை ஸமர்ப்பித்தார்.

(௪௩) அந்த விஶ்வாமித்ரபகவான், சாஸ்த்ரவிதிப்படியே தசரதன் ஸமர்ப்பித்த அர்க்யத்தை அங்கீகரித்துப்பின்பு அரசனுடைய மென்மேல் ஆதாயங்களையும், உள்ளவற்றின் க்ஷேமத்தையும் விசாரித்தார்.

(௪௪) பட்டணம், தேசம், தநத்தினிருப்பு, பந்துக்கள், ஸ்நேஹிதர்கள் ஆகிய இவையெல்லாம் ஒரு குறைவின்றி விளங்குகின்றனவா? என்று தர்மமார்க்கம்றிந்த விஶ்வாமித்ரபகவான் அரசனைக்கேட்டார்.

(௪௫) அக்கம் பக்கங்களிலுள்ள அரசர்கள் உமக்கு வணங்கியிருக்கிறார்களா? சத்துருக்கள் உம்மால் ஜயிக்கப்பட்டார்களா? யஜ்ஞயாகாதிகளையும் அதிதி ஸத்காராதிகளையும் நன்கு யநுஷ்ட்டித்து வருகிறீரா? என்று கேட்டார்.

𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌚 𑌸𑌮𑌾𑌗𑌮𑍍𑌯 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌮𑍁𑌨𑌿𑌪𑍁𑌙𑍍𑌗𑌵𑌃 ॥
𑌋𑌷𑍀𑌂𑌶𑍍𑌚𑌾𑌨𑍍𑌯𑌾𑌨𑍍 𑌯𑌥𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌂 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾 𑌨𑍁𑌵𑌾𑌚 𑌹 ॥
௪௬ ॥

𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌹𑍃𑌷𑍍𑌟𑌮𑌨𑌸𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌨𑌿𑌵𑍇𑌶𑌨𑌮𑍍 ॥
𑌵𑌿𑌵𑌿𑌶𑍁𑌃 𑌪𑍂𑌜𑌿𑌤𑌾𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌨𑌿𑌷𑌣𑍍𑌣𑌾𑌶𑍍𑌚 𑌯𑌥𑌾𑌰𑍍𑌹𑌤𑌃। ௪௭ ॥

𑌅𑌥 𑌹𑍃𑌷𑍍𑌟𑌮𑌨𑌾 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑌂 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌮𑍍 ॥
𑌉𑌵𑌾𑌚 𑌪𑌰𑌮𑍋𑌦𑌾𑌰𑍋 𑌹𑍃𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌮𑌭𑌿𑌪𑍂𑌜𑌯𑌨𑍍। ௪௮ ॥

𑌯𑌥𑌾𑌽𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌥𑌾 𑌵𑌰𑍍𑌷𑌮𑌨𑍂𑌦𑌕𑍇 ॥
𑌯𑌥𑌾 𑌸𑌦𑍃𑌶𑌦𑌾𑌰𑍇𑌷𑍁 𑌪𑍁𑌤𑍍𑌰𑌜𑌨𑍍𑌮𑌾𑌽𑌪𑍍𑌰𑌜𑌸𑍍𑌯 𑌚॥ ௪௯

𑌪𑍍𑌰𑌣𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌯𑌥𑌾 𑌲𑌾𑌭𑍋 𑌯𑌥𑌾 𑌹𑌰𑍍𑌷𑍋 𑌮𑌹𑍋𑌦𑌯𑍇 ॥
𑌤𑌥𑍈𑌵𑌾𑌗𑌮𑌨𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌸𑍍𑌵𑌾𑌗𑌤𑌂 𑌤𑍇 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑍇। ௫௦

𑌕𑌂 𑌚 𑌤𑍇 𑌪𑌰𑌮𑌂 𑌕𑌾𑌮𑌂 𑌕𑌰𑍋𑌮𑌿 𑌕𑌿𑌮𑍁 𑌹𑌰𑍍𑌷𑌿𑌤𑌃 ॥
𑌪𑌾𑌤𑍍𑌰𑌭𑍂𑌤𑍋𑌽𑌸𑌿 𑌮𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌦𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌾 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋𑌽𑌸𑌿
𑌕𑍌𑌶𑌿𑌕॥ ௫௧

𑌅𑌦𑍍𑌯 𑌮𑍇 𑌸𑌫𑌲𑌂 𑌜𑌨𑍍𑌮 𑌜𑍀𑌵𑌿𑌤𑌂 𑌚 𑌸𑍁𑌜𑍀𑌵𑌿𑌤𑌮𑍍॥ ௫௨ ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌰𑌾𑌜𑌰𑍍𑌷𑌿𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌤𑌪𑌸𑌾 𑌦𑍍𑌯𑍋𑌤𑌿𑌤𑌪𑍍𑌰𑌭𑌃 ।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌰𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌃 𑌪𑍂𑌜𑍍𑌯𑍋𑌽𑌸𑌿 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌮𑌯𑌾॥

(௬௬) பின்பு வஸிஷ்ட்டபகவானைக்கிட்டி அவருடைய க்ஷேமங்களை விசாரித்து, அதன்பின் க்ரமமாக மற்ற ருஷிகளிடம் சென்று அவர்களையும் குசலப்ரஸ்நம் பண்ணினார்.

(௬௭) அவர்களனைவரும் விஸ்வாமித்ரரால் பூஜிக்கப்பட்டவர்களாய் ஆநந்தத்தை யடைந்து அரசனுடைய ஸபா மண்டபத்திற் சென்றுஅங்குயதாக்ரமமாக உட்கார்ந்தார்கள்.

(௬௮) சிறந்த ஔதார்யகுணத்தை யுடையவரான தசரதமஹாராஜன், மனக்களிப்புற்றவராய், அதினாலுடம்பெங்கும் மயிரெழுச்சியையடைந்து, முனிஸ்ரேஷ்ட்டராகியஅந்த விஸ்வாமித்ர மஹர்ஷியை ஆவலுடன் பூஜித்து ஒரு வார்த்தை சொன்னார்.

(௬௯-௫௦) ஓ! முனிவர்யரே! நீரிப்போது அசிந்திதமாகவந்தவரவை, தேவலோகத்தில் நின்றும் அருமையான அம்ருதம் வந்தாற்போலவும் நீரில்லாமல் வறண்டதேசத்தில் மழைபெய்தாற்போலவும், பிள்ளையில்லாதவனுக்குத் தனக்குரிய பார்யையினிடத்தில் ஸந்தாந முண்டானாற்போலவும், கெட்டுப்போன வஸ்து மீண்டு வந்தாற்போலவும், விவாஹாதிகள் நேரிட்டபோதுண்டான ஸந்தோஷம் போலவும் நானெண்ணுகிறேன்,

(௫௧) உம்முடைய எந்த அபீஷ்டத்தை எவ்விதமாக ப்ரீதியுடன் செய்வேன். ப்ராஹ்மணோத்தமராகிய ஓ விஸ்வாமித்ரரே! என்னுடைய பாக்யவிசேஷத்தினால் நீர் இங்கே வந்தீர். நானுபகாரம்செய்ய யோக்யராயிருக்கிறீர்.

(௫௨) இப்பொழுதே என்னுடைய ஜந்மம் ஸபலமாயிற்று. நான்பிழைத்தபிழைப்பும் நல்லபிழைப்பாயிறறு.

(௫௩) முன்பு ராஜர்ஷியென்று ப்ரஸித்தராயிருந்தீர். பின்பு பெருந்தவம் செய்து மஹாப்ரபாவத்தை யுடையராய்

𑌤𑌦𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑌿𑌦𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌨𑍍 𑌪𑌵𑌿𑌤𑍍𑌰𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌮𑌮 ।
𑌶𑍁𑌭𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌗𑌤𑌶𑍍𑌚𑌾𑌹𑌂 𑌤𑌵 𑌸𑌨𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌭𑍋 ॥ ௫௪ ॥

𑌬𑍍𑌰𑍂𑌹𑌿 𑌯𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌰𑍍𑌥𑌿𑌤𑌂 𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌗𑌮𑌨𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 ।
𑌇𑌚𑍍𑌛𑌾𑌮𑍍𑌯𑌨𑍁𑌗𑍃𑌹𑍀𑌤𑍋 𑌹𑌂 𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌥𑌪𑌰𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌯𑍇 ॥ ௫௫ ॥

𑌕𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌨 𑌵𑌿𑌮𑌰𑍍𑌶𑌂 𑌚 𑌗𑌨𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 𑌕𑍌𑌶𑌿𑌕 ।
𑌕𑌰𑍍𑌤𑌾 𑌚𑌾𑌹𑌮𑌶𑍇𑌷𑍇𑌣 𑌦𑍈𑌵𑌤𑌂 𑌹𑌿 𑌭𑌵𑌾𑌨𑍍𑌮𑌮 ॥ ௫௬ ॥

𑌮𑌮 𑌚𑌾𑌯𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑍋 𑌮𑌹𑌾𑌭𑍍𑌯𑍁𑌦𑌯𑌿𑌕𑍋 𑌦𑍍𑌵𑌿𑌜 ।
𑌤𑌵𑌾𑌗𑌮𑌨𑌜𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑍋 𑌧𑌰𑍍𑌮𑌶𑍍𑌚𑌾𑌨𑍁𑌤𑍍𑌤𑌮𑍋 𑌮𑌮 ॥ ௫௭ ॥

𑌇𑌤𑌿 𑌹𑍃𑌦𑌯𑌸𑍁𑌖𑌂 𑌨𑌿𑌶𑌮𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂
𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍁𑌖𑌮𑌾𑌤𑍍𑌮𑌵𑌤𑌾 𑌵𑌿𑌨𑍀𑌤𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌗𑍁𑌣𑌯𑌶𑌾 𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌃
𑌪𑌰𑌮𑌰𑍍𑌷𑌿𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌜𑌗𑌾𑌮 𑌹𑌰𑍍𑌷𑌮𑍍 ॥ ௫௮ ॥

𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌷𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌆𑌦𑌿𑌕𑌾𑌵𑍍𑌯𑍇 𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑍇
𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌵𑌤𑌾𑌰𑍋 𑌨𑌾𑌮 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃.*

𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌰𑌾𑌜𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑌦𑍍𑌭𑍁𑌤𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌮𑍍 ।
𑌹𑍃𑌷𑍍𑌟𑌰𑍋𑌮𑌾 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋𑌽𑌭𑍍𑌯𑌭𑌾𑌷𑌤 ॥

ப்ரஹ்மர்ஷியானீர். ஆகையால் இவ்விரண்டு விதத்திலும் நீர் எனக்கு மிகவும் பூஜநீயராயிருக்கிறீர்.

(ருச) ஓ! ப்ரஹ்மர்ஷியே! உம்முடைய வரவு ஆஸ்சர்யகரமாகவும் பரமபாவநமாகவு மிருக்கிறது. உம்முடைய வரவினால் இந்த இடம் புண்யக்ஷேத்ரமாய்விட்டது. உம்முடைய தர்சநத்தினால் நான் புண்யதீர்த்தம் போனவனானேன்.

(ருரு) நீர் எந்தக்கார்யத்தை உத்தேசித்து வந்தீரோ அதை எனக்குச்சொல்லும்;உம்முடைய அநுக்ரஹம் பெற்றவனாய்க்கொண்டு நான் உம்முடைய கார்யத்தைப் பரிபூர்ணமாகச் செய்ய விரும்புகிறேன்.

(ருசா) "இக்காரியம் பெரிது, இதை இவன் செய்வனோ மாட்டானோ" என்று நீர் யோசிக்கவேண்டாம். ஓ! விஶ்வாமித்ரரே! எனக்கு நீர்தெய்வமாயிருக்கிறீர், ஆகையால் உம்முடைய எல்லாக்காரியங்களையும்நான்செய்யக்கடவேனாகிறேன்.

(ருஎ) உம்முடைய வரவினாலுண்டான இந்த மஹத்தான ஶ்ரேயஸ்ஸு எனக்கிப்போ துண்டாயிற்று, இதுவே எனக்கு உயர்ந்த ஸமஸ்த தர்மமுமாயிருக்கிறது.

(ருஅ) இப்படி புத்திமானாகிய தசரதமஹாராஜன் மனதுக்கும் செவிக்கு மின்பமாய் விநயத்துடன் சொன்னவசநத்தைக்கேட்டு, மஹாகுணசாலியாய் மஹாகுணசாலியென்ற கீர்த்தியையுடையராய் ருஷிஶ்ரேஷ்ட்டரான விஶ்வாமித்ர பகவான் மிகுந்த ஸந்தோஷத்தை யடைந்தார்.

ஸ்ரீராமாயண பாலகாண்டத்தில், ஸ்ரீராமாவதார ஸர்கமாகிய

பதினெட்டாவது ஸர்கம்

முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 - 𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑍇

𑌸𑍀𑌤𑌾𑌪𑌰𑌿𑌣𑌯𑌸𑌰𑍍𑌗 𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃

𑌯𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍁 𑌦𑌿𑌵𑌸𑍇 𑌰𑌾𑌜𑌾 𑌚𑌕𑍍𑌰𑍇 𑌗𑍋𑌦𑌾𑌨𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍁𑌦𑌿𑌵𑌸𑍇𑌶𑍂𑌰𑍋 𑌯𑍁𑌧𑌾𑌜𑌿𑌤𑍍𑌸𑌮𑍁𑌪𑍇𑌯𑌿𑌵𑌾𑌨𑍍॥ ௧

𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌕𑍇𑌕𑌯𑌰𑌾𑌜𑌸𑍍𑌯 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾 𑌦𑍍𑌭𑌰𑌤 𑌮𑌾𑌤𑍁𑌲𑌃 ।
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌚 𑌕𑍁𑌶𑌲𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨 𑌮𑌿𑌦 𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥ ௨॥

𑌕𑍇𑌕𑌯𑌾𑌧𑌿𑌪𑌤𑍀 𑌰𑌾𑌜𑌾 𑌸𑍍𑌨𑍇𑌹𑌾 𑌤𑍍𑌕𑍁𑌶𑌲 𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ।
𑌯𑍇𑌷𑌾𑌂𑌕𑍁𑌶𑌲𑌕𑌾𑌮𑍋𑌽𑌸𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑌾𑌮𑌯𑌮𑍍॥
௩॥

𑌸𑍍𑌵𑌸𑍍𑌰𑍀𑌯𑌂 𑌮𑌮 𑌰𑌾𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌕𑌾𑌮𑍋 𑌮𑌹𑍀𑌪𑌤𑌿𑌃 ।
𑌤𑌦𑌰𑍍𑌥 𑌮𑍁𑌪𑌯𑌾𑌤𑍋𑌽𑌹 𑌮𑌯𑍋𑌧𑍍𑌯𑌾𑌂 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨 ॥ ௪॥

𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾𑌹𑌮𑌯𑍋𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌵𑌾𑌹𑌾𑌰𑍍𑌥𑌂 𑌤𑌵𑌾𑌤𑍍𑌮𑌜𑌾𑌨𑍍 ।
𑌮𑌿𑌥𑌿𑌲𑌾 𑌮𑍁𑌪𑌯𑌾𑌤𑌾𑌂 𑌸𑍍𑌤𑍁 𑌤𑍍𑌵𑌯𑌾𑌸𑌹 𑌮𑌹𑍀𑌪𑌤𑍇 ॥ ௫॥
𑌤𑍍𑌵𑌰𑌯𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌯𑌾𑌤𑍋𑌽𑌹𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌕𑌾𑌮𑌸𑍍𑌸𑍍𑌵𑌸𑍁𑌸𑍍𑌸𑍁𑌤𑌮𑍍 ௬

𑌅𑌥 𑌰𑌾𑌜𑌾 𑌦𑌶𑌰𑌥𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌤𑌿𑌥𑌿 𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥
𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑌰𑌮𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑍈𑌃 𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌹𑌂 𑌸𑌮𑌪𑍂𑌜𑌯𑌤𑍍 ।
௭

ஸ்ரீ.

ஸ்ரீவால்மீகிராமாயணம் பாலகாண்டம்.

ஸீ தா ப ரி ண ய ஸ ர் க ம்.

(க) தசரதமஹாராஜன் என்றையதினம் தன் புத்திரர்களுக்கு கோதாநவ்ரதம் செய்வித்தாரோ, அன்றையதினமே பராக்ரமசாலியாகிய யுதாஜித்தென்பவர் அங்கு வந்தார்.

(உ) கேகயராஜனுடைய பிள்ளையாய் பரதனுக்கு ஸாக்ஷாத் மாமாவாகிய அந்த யுதாஜித்து தசரதமஹாராஜனைப் பார்த்து க்ஷேமத்தை விசாரித்துப் பின்பொரு வார்த்தை சொன்னார்.

(ஙா) கேகயதேசத்துக் கரசனாகிய என்பிதா உம்மிடத்தில் ப்ரீதியினால் உம்முடைய க்ஷேமத்தை விசாரிக்கச்சொன்னார். நீர் எந்த எங்களுடைய க்ஷேமத்தைக் கேட்க விரும்புகிறீரோ அந்த நாங்கள் இப்போது க்ஷேமத்தையுடையவர்களாயிருக்கிறோம்.

(ச) என்னுடைய உடன்பிறந்தாளான கைகேயியின் பிள்ளையாகிய பரதனை கேகயமஹாராஜன் பார்க்கவிரும்புகிறார். ஓ! தசரதமஹாராஜனே! நான் அதற்காக (பரதனை அழைத்துக் கொண்டு போகவேண்டுமென்று) புறப்பட்டு அயோத்திக்கு வந்தேன்.

(ரு-௯) அந்த அயோத்தியில் விசாரித்தவளவில், உம்முடைய பிள்ளைகள் விவாஹார்த்தமாக உம்முடனேகூடப் புறப்பட்டு மிதிலாநகரத்துக்குப் போனார்களென்று கேட்டேன், உடனே அதித்வரையுடனே அங்கு நின்றும் புறப்பட்டு என் மருமகனைப்பார்க்க விருப்பமுற்றவனாய் இங்கு வந்தேன்.

(கூ-௯) பின்பு தசரதமஹாராஜன், ப்ரியமான அதிதியாய் வந்த தன் மைத்துனனாகிய யுதாஜித்தைப்பார்த்து, தன்னால்

𑌤𑌤𑌸𑍍𑌸𑌾𑌮𑍁𑌕𑍍𑌷𑌿𑌣𑍋𑌨𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑍈𑌰𑍍𑌦𑍍𑌰𑍂𑌹𑌾𑌤𑍃𑌭𑌿𑌃॥ ௭

𑌪𑍍𑌰𑌹𑌿𑌤𑍇 𑌪𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑌾𑌯 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌕𑌾𑌰𑍍𑌯𑌵𑌿𑌤𑍍।
𑌦𑍀𑌕𑍍𑌷𑌾𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑍍𑌯 𑌯𑌜𑍍𑌞𑌵𑌾𑌟𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑌤𑍍॥ ௮

𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 𑌵𑌿𑌜𑌯𑍇 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑍈𑌃॥
𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌭𑌿𑌃 𑌸𑌹𑌿𑌤𑍋 𑌰𑌾𑌮𑌃 𑌕𑍃𑌤𑌕𑍌𑌤𑍁𑌕𑌮𑌙𑍍𑌗𑌲𑍈𑌃॥ ௯
𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌂 𑌪𑍁𑌰𑌤𑌃 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌰𑍍𑌷𑍀𑌨𑌪𑌰𑌾𑌨𑌪𑌿। ௯॥
(𑌪𑌿𑌤𑍁𑌃 𑌸𑍍𑌵𑍀𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌦𑍍𑌭𑍍𑌰𑌾𑌤𑍃𑌭𑌿𑌰𑌾𑌵𑍃𑌤𑌃);

𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑍇𑌤𑍍𑌯 𑌵𑍈𑌦𑍇𑌹𑌾𑌧𑌿𑌪𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍॥ ௧௦॥

𑌰𑌾𑌜𑌾 𑌦𑌶𑌰𑌥𑍋 𑌰𑌾𑌜𑌨𑍍 𑌕𑍃𑌤𑌕𑍌𑌤𑍁𑌕𑌮𑌙𑍍𑌗𑌲𑍈𑌃।
𑌪𑍁𑌤𑍍𑌰𑍈𑌰𑍍𑌨𑌰𑌵𑌰𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌦𑌾𑌤𑌾𑌰𑌮𑌭𑌿𑌕𑌾𑌙𑍍𑌕𑍍𑌷𑌤𑍇॥ ௧௧॥

𑌦𑌾𑌤𑍃𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍍𑌰𑌹𑍀𑌤𑍃𑌭𑍍𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌃 𑌪𑍍𑌰𑌭𑌵𑌨𑍍𑌤𑌿 𑌹𑌿।
𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑌸𑍍𑌵 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑍈𑌵𑌾𑌹𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥ ௧௨॥

பூஜிக்கத்தக்கவரான அவரை மிக்க ஆதரத்துடன் அர்க்யபாத்யாதி ஸத்காரங்களினுல் பூஜித்தார்.

(எ-அ) பின்பு தசரதமஹாராஜன், புத்திரர்களுடன்கூட அன்றிரவு தானிறங்கியிருந்த இடத்திலே ஸுகமாக இருந்து, மறுநாள் விடியற்காலத்தி லெழுந்திருந்து, விவாஹத்துக்கு முன்னேசெய்யவேண்டிய கங்கணபந்தநம்முதலிய கர்மங்களை யெல்லாம் செய்து முடித்துவிட்டு, அப்பொழுதே ருஷிகளை முன்னிட்டுக்கொண்டு ஜநகமஹாராஜன் கோடித்த விவாஹ மண்டபத்திற்கு வந்து சேர்ந்தார்.

(கூ௯) விவாஹயோக்யமாய் ஜயப்ரதமான அந்தசுபமுகூர்த்தத்தில் ஸ்ரீராமன்,ஸர்வாபரண பூஷிதர்களான தன் தம்பிகளுடன்கூட கங்கணபந்தநம் முதலிய விவாஹாங்கமான மங்களா சாரங்களை யுடையராய்க்கொண்டு, வஸிஷ்ட்ட மஹா முனிவரையும் மற்ற ருஷிகளேயும் முன்னிட்டுக் கொண்டு விவாஹமண்டபத்தை யடைந்தார்.

(தம்பிகளோடு கூடினவராய் தகப்பனுருடைய ஸமீபத்தில் நின்ருர்.)

(சo)பின்பு,பூஜ்யராகிய வஸிஷ்ட்டமஹாமுனிவர்சென்று ஜநகமஹாராஜனைப் பார்த்து இவ்வார்த்தையைச் சொன்னுர்.

(சக) ராஜாதிராஜனுகிய ஓ ஜநகமஹாராஜனே! தசரத மஹாராஜன், தன் பிள்ளைகளுக்கு கங்கணபந்தநம் முதலிய மங்கள கர்மங்களை முடித்துக்கொண்டு அவர்களுடன் கூட வந்து கந்யாப்ரதாநம் பண்ணுகிற உம்முடைய ஸம்மதியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்.

(சஉ) கொடுக்கிறவன் வாங்குகிறவன் இவ்விருவரும் சேர்ந்தாலன்ருே தாந ப்ரதிக்ரஹங்கள் நடக்கும். ஆகையால் நீர் விவாஹத்தைச் செய்வித்து நீர் பண்ண ப்ரதிஜ்ஞையை நிறைவேற்றிக்கொள்ளும்.

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌰𑌮𑍋𑌦𑌾𑌰𑍋 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍇𑌨 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌨𑌾 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌵𑌾𑌚 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌪𑌰𑌮𑌧𑌰𑍍𑌮𑌵𑌿𑌤𑍍॥ ௧௩॥

𑌕𑌃 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌹𑌾𑌰𑍋 𑌮𑍇 𑌕𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌂 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑍍𑌵𑌗𑍃𑌹𑍇 𑌕𑍋 𑌵𑌿𑌚𑌾𑌰𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌯𑌥𑌾 𑌰𑌾𑌜𑍍𑌯𑌮𑌿𑌦𑌂 𑌤𑌵॥ ௧௪॥

𑌕𑍃𑌤𑌕𑍌𑌤𑍁𑌕𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌵𑌾 𑌵𑍇𑌦𑌿𑌮𑌧𑍍𑌯𑌮𑍁𑌪𑌾𑌗𑌤𑌾𑌃 ।
𑌮𑌮 𑌕𑌨𑍍𑌯𑌾 𑌮𑍁𑌨𑌿𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌦𑍀𑌪𑍍𑌤𑌾 𑌵𑌹𑍍𑌨𑍇𑌰𑌿𑌵𑌾𑌰𑍍𑌚𑌿𑌷𑌃॥ ௧௫॥

𑌸𑌜𑍍𑌜𑍋𑌽𑌹𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑍍𑌷𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌵𑍇𑌦𑍍𑌯𑌾𑌮𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌃 ।
𑌅𑌵𑌿𑌘𑍍𑌨𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑌾𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌕𑌿𑌮𑌰𑍍𑌥𑌮𑌵𑌲𑌮𑍍𑌬𑌤𑍇 ॥ ௧௬॥

𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌜𑌨𑌕𑍇𑌨𑍋𑌕𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌦𑌶𑌰𑌥𑌸𑍍𑌤𑌦𑌾 ।
𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑍁𑌤𑌾𑌨𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍃𑌷𑌿𑌗𑌣𑌾𑌨𑌪𑌿॥ ௧௭॥

𑌤𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌵𑌿𑌦𑍇𑌹𑌾𑌨𑌾𑌂 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌮𑌿𑌦𑌮𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍 ।
𑌕𑌾𑌰𑌯𑌸𑍍𑌵 𑌋𑌷𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑍃𑌷𑌿𑌭𑌿𑌃 𑌸𑌹 𑌧𑌾𑌰𑍍𑌮𑌿𑌕 ॥ ௧௮॥
𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌂 𑌵𑍈𑌵𑌾𑌹𑌿𑌕𑍀𑌂 𑌵𑌿𑌭𑍋 ।
௧௮௨॥

(கங) இப்படி மஹாநுபாவனுகிய வஸிஷ்ட்ட பகவான் சொல்லக்கேட்டு, உயர்ந்த ஔதார்யகுண முள்ளவராய், மஹாதேஜஸ்வியாய், ஸகல தர்மங்களேயு மறிந்தவரான ஜநக மஹாராஜன் பதிலுத்திரவு சொன்னர்.

(கச) தசரதமஹாராஜன் உள்ளே வருகைக்கு எந்த வாசற்காப்பான் தடைசெய்கிருன்? அவர் யாருடைய ஆஜ்ஞையை எதிர் பார்க்கிருர்? அவருக்கு ஒருதடையும் கிடையாது, ஒருவனுத்திரவை எதிர்பார்க்கவும் வேண்டாம். அயோத்தியாநகரம்போல் இதுவும் அவருடைய ராஜ்யமே, இப்படியிருக்கத்தன்னுடைய க்ருஹத்தில் ஒருவரை விசாரிக்கவேண்டியதென்ன இருக்கிறது?

(கரு) ஒ, வஸிஷ்ட்டமஹாமுனிவரே! என்னுடைய பெண்களும் விவாஹாங்கமான ஸகலமான மங்களாசாரங்களேயும் முடித்துக்கொண்டு விவாஹமண்டபத்தில் வேதிகையினருகில் அக்கினியினுடைய ஜ்வாலைகள் போல் வந்து நிற்கிருர்கள்.

(கசு) நானும் இந்தவிவாஹவேதியிலேயே ஸித்தமாயிருக்கிறேன். உம்முடைய ஆஜ்ஞையை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். தசரதமஹாராஜன் தடையின்றிக்கார்யங்களேச் செய்யட்டும். எதுக்காக விலம்பிக்கிருர் ? என்று ஜநகர் சொன்னர்.

(கஎ) பின்பு வஸிஷ்ட்டர் ஜநகமஹாராஜனுடைய அபிப்பிராயத்தைத் தூதுவழியாக அறிவிக்கக்கேட்டதசரதமஹாராஜன் தன்புத்திரர்களே ருஷிகளுடன்கூட்டித் திருமணப் பந்தலுக் கனுப்பினர்.

(கஅ) பின்பு விதேஹகுலத்திற் பிறந்த ஜநகமஹாராஜன் வஸிஷ்ட்டரைப்பார்த்து, ஒ மஹர்ஷியே! ஸகலப்ராணிகளுக்கும் ஆநந்த ஜநகராயிருக்கிற ஸ்ரீராமனுக்கு விவாஹமஹோத்ஸவத்தில் நடக்கவேண்டியவைதிகக்ரியைகளே ஸமஸ்த

ததேத்யுக்த்வா து ஜநகம் வஸிஷ்டோ பகவாந்ருஷி: ।
௧௯॥
விஶ்வாமித்ரம் புரஸ்க்ருத்ய ஶதாநந்தம் ச தார்மிகம் ।
ப்ரபாமத்யே து விதிவத் வேதிம் க்ருத்வா மஹாதபா: ॥௨௦॥
அலஞ்சகார தாம் வேதிம் கந்தபுஷ்பை: ஸமந்தத: । [௨௧॥
ஸுவர்ணபாலிகாபிஶ்ச சித்ரகும்பைஶ்ச ஸாங்குரை:
அங்குராட்யை: ஶராவைஶ்ச தூபபாத்ரை: ஸதூப-
கை: ।
ஶங்கபாத்ரை: ஸ்ருவை: ஸ்ருக்பி: பாத்ரைரர்க்யாபி
பூரிதை: ॥ ௨௨॥
லாஜபூர்ணைஶ்ச பாத்ரீபிரக்ஷதைரபிஸம்ஸ்க்ருதை: ।
௨௨அ॥
தர்பை: ஸமை: ஸமாஸ்தீர்ய விதிவந் மந்த்ரபூர்வகம் ॥௨௩॥
அக்நிமாதாய வேத்யாம் து விதிமந்த்ரபுரஸ்க்ருதம் ।
ஜுஹாவாக்நௌ மஹாதேஜா வஸிஷ்டோ பகவாந்ருஷி: ॥௨௪

தத: ஸீதாம் ஸமாநீய ஸர்வாபரணபூஷிதாம் ।
ஸமக்ஷமக்நே: ஸம்ஸ்தாப்ய ராகவாபிமுகே ததா ॥ ௨௫॥
அப்ரவீஜ் ஜநகோ ராஜா கௌஸல்யாநந்தவர்தநம் ।௨௫அ

ருஷிகணங்களோடேகூட நடப்பியும். நீர் ஸகல தர்மத்தையு மறிவீர். எங்களுக்கும் நீரே ப்ரபுவாகிறீர் என்று சொன்னார்.

(கக-உஉ) வஸிஷ்ட்டபகவான் அதைக்கேட்டுஅப்படி யேசெய்கிறேன் என்று சொல்லிப் பின்பு விஸ்வாமித்ர மஹர் ஷியையும் ஜநகபுரோஹிதராய் தார்மிகரான சதாநந்தரையும் முன்னிட்டுக்கொண்டு மங்களார்த்தமாகத் தென்னை ஓலையி னல் அலங்கரிக்கப்பட்ட மண்டபத்தின் நடுவில் சாஸ்திரத் திற் சொல்லியபடி திண்ணைகட்டி அதை நாலுபக்கத்திலும் சந்தநபுஷ்பாக்ஷதைகளினு லலங்கரித்து, அதில் நவதாந்யத் தின் முளைகளையுடைய தங்கத்தினுற்செய்த பாலிகைகளையும், கரகங்களையும், மடக்குக்களையும், தூபங்களோடுகூடின தூப பாத்ரங்களையும், சங்காகாரமான பாத்ரங்களையும், ஹோமம் செய்கிற ஸ்ருக் ஸ்ருவங்களையும், அர்க்யத்துக்காக ஜலம் பூரி த்த பாத்ரங்களையும், பொரிபாத்ரங்களையும், மற்றுமுள்ள பா த்திரங்களையும், அக்ஷதை சந்தநம் மஞ்சள் முதலானவற்றினு லலங்கரித்துவைத்தார்.

(உங-உச) ஒரே யளவாயுள்ள தர்ப்பைகளை நாற்புறங்களி லும்பரப்பி நடுவேயதாசாஸ்த்ரமாக மந்த்ரபூர்வகமாக அக்னி னியைக்கொண்டுவந்து ஸ்த்தாபித்து அதைமந்த்ரங்களினுல் பரிசுத்தமாக்கி,அதில் வஸிஷ்ட்டபகவான்ஹோமம்செய்தார்.

(உரு) பின்பு ஜநகமஹாராஜன், தன் பெண்ணுகிய ஸீதாதேவியை ஸர்வாபரணங்களினுலு மலங்கரித்து அழைத் துக்கொண்டுவந்து அக்நிக்கெதிரில் ஸ்ரீராமன் முன்னே நிறு த்தி, அப்பொழுது கௌஸல்யாதேவிக்கு ஆநந்தத்தை வளர் த்தா நிற்கிற ஸ்ரீராமனைக்குறித்து இப்படிச் சொன்னார்.

—*𑌶𑍍𑌰𑍀𑌸𑍀𑌤𑌾𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌣𑌿𑌗𑍍𑌰𑌹𑌣𑌪𑌟𑍍𑌟𑌃*—

*𑌇𑌯𑌂 𑌸𑍀𑌤𑌾 𑌮𑌮 𑌸𑍁𑌤𑌾 𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌚𑌰𑍀 𑌤𑌵 ॥ ௨௬॥
𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌛 𑌚𑍈𑌨𑌾𑌂 𑌭𑌦𑍍𑌰𑌂 𑌤𑍇 𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾
𑌪𑌤𑌿𑌵𑍍𑌰𑌤𑌾 𑌮𑌹𑌾𑌭𑌾𑌗𑌾 𑌛𑌾𑌯𑍇𑌵𑌾𑌨𑍁𑌗𑌤𑌾 𑌸𑌦𑌾॥ ௨௭॥
𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑌿𑌪𑌦𑍍 𑌰𑌾𑌜𑌾 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌪𑍂𑌤𑌂 𑌜𑌲𑌂 𑌤𑌦𑌾॥௨௭
𑌸𑌾𑌧𑍁 𑌸𑌾𑌧𑍍𑌵𑌿𑌤𑌿 𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌋𑌷𑍀𑌣𑌾𑌂 𑌵𑌦𑌤𑌾𑌂 𑌤𑌦𑌾॥௨௮
𑌦𑍇𑌵𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑌿𑌨𑌿𑌰𑍍𑌘𑍋𑌷𑌃 𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑌰𑍍𑌷𑍋 𑌮𑌹𑌾𑌨𑌭𑍂𑌤𑍍

---

*விசேஷார்த்தம்.—இவளுடைய ஸௌந்தர்ய ஸௌகுமார்ய லாவண்யாதி குணங்களை நேரே பாரீர். சிலஸௌந்தர்யாதிகளில் உமக்குத் தகுந்தவள் இவள். இவள் கர்ப்பவாஸம் பண்ணிப் பிறந்தவளன்றிக்கே பூமியில் கலப்பையின்கீழே அகப்பட்ட அயோநிஜையாகையாலே, கர்ப்பவாஸாதிகளினாலுண்டானமறுவற்று ஸகல குணோஜ்வலையாய் விளங்குகிறாளென்பதை நீரே அநுமித்துக்கொள்ளலாம்- இவள் பிறந்த இடமோ பூமி, வளர்ந்த இடமோ ஆசாரப்ரதாநர்களாக ஜகத்தில் ப்ரஸித்திபெற்ற ஜநககுலத்தில்பிறந்த என்னுடைய மாளிகை. ஆகையால் இவள்குலசுத்தியில்குறைந்தவளல்லள்:-இவள் ஸர்வாங்க ஸுந்தரியாய் போகத்துக்குமாத்திரமே உபயோகிப்பவளன்று, உமக்கு தர்மபத்நியாயிருந்து நீராசரிக்கப்போகிற தர்மங்களையெல்லாம்தானும்கூடஇருந்துஅநுஷ்டிக்கத்தக்கவள் "𑌸𑌹𑌧𑌰𑍍𑌮𑌂 𑌚𑌰𑌤𑌃" என்று தன்னையேபரமதர்மமாகப்பற்றி நின்ற நீர் ஒருவன் ஆஶ்ரிதவேஷத்தை மாத்ரமாகிலும் கொண்டுவந்தானாகில், அவனிடத்தி லனேகர் அநேக தோஷங்களைச் சொல்லினும், "𑌦𑍋𑌷𑍋 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌤𑌾𑌮𑍇𑌤𑌦𑌗𑌰𑍍𑌹𑌿𑌤𑌮𑍍" என்றுஇவனாஶ்ரயிப்பதற்குமுன்இவனுக்கதுதோஷமாயினும்,ஆஶ்ரயித்தபின் அதுதோஷமாக மாட்டாதென்று அவர்கள்சொல்லைமறு

(௨௬) என்னுடைய பெண்ணாகிய இந்த ஸீதாதேவி உமக்குக்கூட இருந்து தர்மங்களை ஆசரிக்கக்கடவள். இவளை நீர் அங்கீகரியும். உமக்குமங்களமுண்டாகட்டும். இவளுடைய கையை உம்முடைய கையினால் பிடித்துக்கொள்ளும்.

(௨௭) இவள் பதிவ்ரதையாகக்கடவள், மஹாபாக்யவதியாகக்கடவள், நிழலைப்போல் எப்போதும் உம்மை அநுஸரித்தேயிருக்கக்கடவள், என்று சொல்லி ஜநகமஹாராஜன் மந்த்ரபூர்வகமாக ஸ்ரீராமனுடைய கையில் ஜலத்தைவிட்டார்.

(௨௮) அக்காலத்தில் தேவர்களும் ருஷிகளும் "ஜநகமஹாராஜன் நன்றாகச்செய்தார் நன்றாகச்செய்தார்" என்று

த்து அவன் படுமிடரைக்காணமாட்டாமல் அவனுடைய தோஷங்களைப்பொறுத்து ரக்ஷிப்பீராகில்,இவளும் 'நகஸ்ஶ்சிந்நாபராத்யதி' என்று, ஆம் ஆம் உலகத்தில் தோஷ மில்லாதார் யார்? தோஷத்தையேபார்த்துதண்டிக்கில்உம்முடையஅநுக்ரஹத்துக்குப்பாத்ரமான ஆள் இல்லாமலே போய்விடு மாகையால் எவ்வளவு பாபியாயினும் அவனையும்கூடரக்ஷிப்பதே பெரியோர்க்குக் கடமையென்று சொல்லி அதுக்கும் இவள் ஸஹகாரியாயிருப்பாள். "ராகவத்வேப வைதேஹீ" என்கிற படியே பராத்பரனாகிய நீர் இப்போது ராமாவதார மெடுத்தபோது உமக்கு நித்யாநபாயிநியான இவள் ஸீதையாக அவதரித்தவளாய் உமக்குநித்யஸித்தையா யிருந்தபோதிலும்,அர்ச்சாவதாரத்தில் வருஷம்தோறும் விவாஹோத்ஸவத்தில் அங்கீகரிப்பதுபோல், இந்தவிபவாவதாரத்திலும் இவளை யங்கீகரிக்கக்கடவீர்-இந்த ஸீதாதேவியுடன் சேர்ந்த உமக்கு த்ருஷ்டி தோஷம்வாராதபடிஸுகமாக வாழ்வீராக. ஸமஸ்தகந்யாலக்ஷணஸம்பூர்ணையானஇவளை அங்கீகரித்தஉமக்குஇனிஸகலவிதமங்களமும்உண்டாகப்போகிறது. காந்தர்வவிவாஹம்போலன்றிக்கே இவளுடைய கையை உம்முடையகையினால்பிடித்து விவாஹம்செய்துகொள்ளும்

𑌸 𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑌾 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍋𑌦𑌕𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑍃𑌤𑌾𑌮𑍍॥ ௨௯
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀 𑌜𑍍𑌜𑌨𑌕𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌹𑌰𑍍𑌷𑍇𑌣𑌾𑌭𑌿𑌪𑌰𑌿𑌪𑍍𑌲𑍁𑌤𑌃।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌾𑌽𑌗𑌚𑍍𑌛 𑌭𑌦𑍍𑌰𑌂𑌤𑍇 𑌊𑌰𑍍𑌮𑌿𑌲𑌾 𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌾𑌂 𑌮𑌯𑌾॥ ௩௦॥
𑌪𑍍𑌰𑌤𑍀𑌚𑍍𑌛 𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵 𑌮𑌾𑌭𑍂𑌤𑍍𑌕𑌾𑌲𑌸𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑌯𑌃॥௩௦

𑌤 𑌮𑍇𑌵 𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌜𑌨𑌕𑍋 𑌭𑌰𑌤𑌂 𑌚𑌾𑌭𑍍𑌯𑌭𑌾𑌷𑌤 ॥
𑌗𑍃𑌹𑌾𑌣 𑌪𑌾𑌣𑌿𑌂 𑌮𑌾𑌣𑍍𑌡𑌵𑍍𑌯𑌾𑌃 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨 ॥
௩௧॥

𑌶𑌤𑍍𑌰𑍁𑌘𑍍𑌨𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌹𑍍𑌯𑌬𑍍𑌰𑌵𑍀𑌜𑍍𑌜𑌨𑌕𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥
𑌶𑍍𑌰𑍁𑌤𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌪𑌾𑌣𑌿𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌷𑍍𑌵 𑌪𑌾𑌣𑌿𑌨𑌾।
௩௨॥

𑌸𑌰𑍍𑌵𑍇 𑌭𑌵𑌨𑍍𑌤𑌃 𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑍁𑌚𑌰𑌿𑌤𑌵𑍍𑌰𑌤𑌾𑌃 ॥
𑌪𑌤𑍍𑌨𑍀𑌭𑌿𑌃 𑌸𑌨𑍍𑌤𑍁 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌾 𑌮𑌾𑌭𑍂𑌤𑍍𑌕𑌾𑌲𑌸𑍍𑌯 𑌪𑌰𑍍𑌯𑌯𑌃॥௩௩

𑌜𑌨𑌕𑌸𑍍𑌯 𑌵𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌪𑌾𑌣𑍀𑌨𑍍 𑌪𑌾𑌣𑌿𑌭𑌿 𑌰𑌸𑍍𑌪𑍃𑌶𑌨𑍍 ॥
𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌂 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌯 𑌮𑌤𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃॥௩௪

கொண்டாடினார்கள். தேவலோகத்தில் பேரி யடித்தார்கள். பூமழை பொழிந்தார்கள்.

(உக௯) இப்படி ஜநகமஹாராஜன் ஸீதாதேவியை உதக பூர்வகமாக ஸ்ரீராமனுக்குக்கந்யாதாநம் செய்து பரிபூர்ண ஸந்தோஷத்தையுடையவராய்லக்ஷ்மணனைப்பார்த்துச்சொன்னார்.

(௩0௯) (அதாவது) லக்ஷ்மணா! வாரும், நான் இந்த ஊர்மிளை என்கிற என்னுடைய பெண்ணை உமக்குக்கொடுக்க நிஶ்சயித்தேன். இவளை நீர் அங்கீகரியும். உமக்கு ஸகலமங்களங்களும் உண்டாகக்கடவது. இவள் கையைப்பிடித்து விவாஹம் செய்து கொள்ளும். காலதாமஸம் செய்ய வேண்டாம் சீக்கிரமாகச் செய்துகொள்ளும் என்றார்.

(௩க௯) ஜநகமஹாராஜன் லக்ஷ்மணனைக் குறித்து இப்படி சொல்லிப் பின்பு பரதனை யழைத்து, ஓய் ரகுகுலத்திற் பிறந்த பரதனே! என் தம்பி பெண்ணாகிய இந்த மாண்டவியின் கையை உம்முடைய கையினால் பிடித்து விவாஹம் செய்துகொள்ளுமென்றார்.

(௩உ௯) பின்பு தர்மசிந்தையுள்ள அந்த ஜநகமஹாராஜன் சத்ருக்நனை யழைத்து, ஓய் நீண்ட புஜங்களை யுடைய சத்ருக்நனே! நீர் என் தம்பி பெண்ணாகிய ஶ்ருதகீர்த்தி யென்பவளுடையகையை உம்முடைய கையினால் பிடித்து விவாஹம் செய்துகொள்ளு மென்றார்.

(௩௩௯) ககுத்ஸ்த்தகுலத்திற்பிறந்த நீங்கள் நாலுபெயர்களும் பத்நிகளுடன்கூடி சாந்தகுணமுடையவர்களாய் தர்மாநுஷ்ட்டாந நிரதர்களாய் ஆகக்கடவீர்கள். இப்பொழுது காலவிலம்பம் செய்யவேண்டாமென்றார்.

(௩௪௯) ஜநகமஹாராஜன் சொன்ன அவ்வார்த்தையைக் கேட்டு ராமலக்ஷ்மண பரத சத்ருக்நர்கள் நால்வரும், தங்கள் குலத்துக்குப் புரோஹிதரான வஸிஷ்ட்டமஹாமுநியின் சொ

𑌅𑌗𑍍𑌨𑌿𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌵𑍇𑌦𑌿𑌂 𑌰𑌾𑌜𑌾𑌨𑌮𑍇𑌵 𑌚 ॥ ௩௫
𑌋𑌷𑍀𑌂𑌶𑍍𑌚𑍈𑌵 𑌮𑌹𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌃 𑌸𑌹𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌰𑌘𑍂𑌤𑍍𑌤𑌮𑌾𑌃 ।
𑌯𑌥𑍋𑌕𑍍𑌤𑍇𑌨 𑌤𑌥𑌾 𑌚𑌕𑍍𑌰𑍁𑌰𑍍𑌵𑌿𑌵𑌾𑌹𑌂 𑌵𑌿𑌧𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌮𑍍 ॥ ௩௬ ॥

(𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑍈𑌶𑍍𑌚 𑌗𑍃𑌹𑍀𑌤𑍇𑌷𑍁 𑌲𑌲𑌿𑌤𑍇𑌷𑍁 𑌚 𑌪𑌾𑌣𑌿
[𑌷𑍁 ॥

𑌪𑍁𑌷𑍍𑌪𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑍍𑌮𑌹𑌤𑍍𑌯𑌾𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌸𑍁𑌭𑌾𑌸𑍍𑌵𑌰𑌾 । ௩௬
𑌦𑌿𑌵𑍍𑌯𑌦𑍁𑌨𑍍𑌦𑍁𑌭𑌿𑌨𑌿𑌰𑍍𑌘𑍋𑌷𑍈𑌰𑍍𑌗𑍀𑌤𑌵𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌨𑌿𑌸𑍍𑌵𑌨𑍈𑌃 ॥ ௩௭
𑌨𑌨𑍃𑌤𑍁𑌶𑍍𑌚𑌾𑌪𑍍𑌸𑌰𑌸𑍍𑌸𑌙𑍍𑌘𑌾 𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌾𑌶𑍍𑌚 𑌜𑌗𑍁𑌃 𑌕𑌲𑌮𑍍 । ௩௭
𑌵𑌿𑌵𑌾𑌹𑍇 𑌰𑌘𑍁𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌂 𑌤𑌦𑌦𑍍𑌭𑍁𑌤𑌮𑌦𑍃𑌶𑍍𑌯𑌤 ॥ ௩௮ ॥

𑌈𑌦𑍃𑌶𑍇 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇 𑌤𑍁 𑌤𑍂𑌰𑍍𑌯𑍋𑌦𑍍𑌘𑍁𑌷𑍍𑌟𑌨𑌿𑌨𑌾𑌦𑌿𑌤𑍇 ।
𑌤𑍍𑌰𑌿𑌰𑌗𑍍𑌨𑌿𑌂 𑌤𑍇 𑌪𑌰𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌊𑌹𑍁𑌰𑍍𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌮𑌹𑍌𑌜𑌸𑌃 ॥ ௩௯

𑌅𑌥𑍋𑌪𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌂 𑌜𑌗𑍍𑌮𑍁𑌸𑍍𑌤𑍇 𑌸𑌭𑌾𑌰𑍍𑌯𑌾 𑌰𑌘𑍁𑌨𑌨𑍍𑌦𑌨𑌾𑌃 ।
𑌰𑌾𑌜𑌾𑌪𑍍𑌯𑌨𑍁𑌯𑌯𑍌 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍 𑌸𑌰𑍍𑌷𑌿𑌸𑌙𑍍𑌘𑌃 𑌸𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌃 ॥ ௪௦ ॥
𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌷𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑍀𑌯𑍇 𑌆𑌦𑌿𑌕𑌾𑌵𑍍𑌯𑍇 𑌬𑌾𑌲𑌕𑌾𑌣𑍍𑌡𑍇
𑌶𑍍𑌰𑍀𑌸𑍀𑌤𑌾𑌪𑌰𑌿𑌣𑌯𑍋 𑌨𑌾𑌮 𑌤𑍍𑌰𑌿𑌸𑌪𑍍𑌤𑌤𑌿𑌤𑌮𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃.

𑌅𑌥 𑌰𑌾𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌵𑍍𑌯𑌤𑍀𑌤𑌾𑌯𑌾𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃 ।
𑌆𑌪𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑍌 𑌚 𑌰𑌾𑌜𑌾𑌨𑍌 𑌜𑌗𑌾𑌮𑍋𑌤𑍍𑌤𑌰𑌪𑌰𑍍𑌵𑌤𑌮𑍍 ॥

ற்படியே ஸீதாதேவிமுதலிய நாலுபெண்களுடையவும் கைக ளைத் தங்கள் கைகளினால் பிடித்து அங்கீகரித்தார்கள்.

(௩௫-௩௬) பின்பு மஹாநுபாவர்களாய் ரகூத்தமர்க ளான அந்நால்வரும் அக்நியையும் வேதிகையையும் ஜநக மஹாராஜனையும் ருஷிகளையும் பார்யையோடு கூடினவர்களா ய்க்கொண்டு ப்ரதக்ஷிணம்செய்து, அப்போது சாஸ்த்ரத்திற் சொல்லிய விதிப்படியே கல்பஸூத்ரப்ரகாரம் விவாஹம் செ ய்து கொண்டார்கள்.

(௩எ) (இவர்கள் பாணிக்ரஹணம் பண்ணினவளவில்) ஆகாசத்தில் நின்றும் அதிஸ்வச்சமான பெரிய பூமழை பொ ழிந்தது. தேவதுந்துபி ம்ருதங்கம் முதலிய வாத்யங்களினு டையவும் பாட்டினுடையவும்சப்தங்களுடன்கூட (௩அ) அப் ஸரஸ்ஸுக்கள் கூட்டங் கூட்டமாய்ச்சேர்ந்து நர்த்தநம் செய் தார்கள். கந்தர்வர்கள் இனிமையாகப் பாடினார்கள். ரகுகுலப திகளான இந்நால்வருடைய விவாஹகாலத்திலுண்டான இ தெல்லாம் அத்யாஸ்சர்யகரமா யிருந்தது.

(௩௯) இப்படி வாத்தியங்கள் முழங்கிக்கொண் டிருக் குங்காலத்தில், மஹாதேஜஸ்விகளான இந்நால்வரும் அக்நி யை மூன்று ப்ரதக்ஷிணம் செய்து தங்கள் பார்யைகளை விவா ஹம் செய்து கொண்டார்கள்.

(௪௦) பின்பு ராம லக்ஷ்மண பரத சத்ருக்நர்கள் நால்வ ரும் தங்கள் தங்கள்பார்யைகளோடு கூடினவர்களாய்த் தாங்க ளிழிந்திருந்த இடத்திற்குச் சென்றார்கள். தசரதமஹாராஜ னும் ருஷிகளுடனும் பந்துக்களுடனும் கூடினவராய், பார்யா ஸமேதர்களான தன் புத்திரர்களைப் பார்த்துக்கொண்டே அவர்களைப் பின்தொடர்ந்து தன்னிருப்பிடத்துக்குப்போய்ச் சேர்ந்தார்.

ஸீதாபரிணய ஸர்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇-𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑍇

𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌹𑍃𑌦𑌯𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌤𑌤𑍋 𑌯𑍁𑌦𑍍𑌧𑌪𑌰𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌸𑌮𑌰𑍇 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍॥
𑌰𑌾𑌵𑌣𑌂 𑌚𑌾𑌗𑍍𑌰𑌤𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌸𑌮𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍॥௧॥

𑌦𑍈𑌵𑌤𑍈𑌶𑍍𑌚 𑌸𑌮𑌾𑌗𑌮𑍍𑌯 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌮𑌭𑍍𑌯𑌾𑌗𑌤𑍋 𑌰𑌣𑌮𑍍।
𑌉𑌪𑌾𑌗𑌮𑍍𑌯𑌾𑌬𑍍𑌰𑌵𑍀 𑌦𑍍𑌰𑌾𑌮 𑌮𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍋 𑌭𑌗𑌵𑌾 𑌨𑍍𑌰𑍁𑌷𑌿𑌃 । ௨॥

𑌰𑌾𑌮 𑌰𑌾𑌮 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌶𑍃𑌣𑍁 𑌗𑍁𑌹𑍍𑌯𑌂 𑌸𑌨𑌾𑌤𑌨𑌮𑍍।
𑌯𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌨𑌰𑍀𑌨𑍍 𑌵𑌤𑍍𑌸 𑌸𑌮𑌰𑍇 𑌵𑌿𑌜𑌯𑌿𑌷𑍍𑌯𑌸𑌿। ௩॥

𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌹𑍃𑌦𑌯𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌶𑌤𑍍𑌰𑍁𑌵𑌿𑌨𑌾𑌶𑌨𑌮𑍍।
𑌜𑌯𑌾𑌵𑌹𑌂 𑌜𑌪𑍇 𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯 𑌮𑌕𑍍𑌷𑌯𑍍𑌯𑌂 𑌪𑌰𑌮𑌂 𑌶𑌿𑌵𑌮𑍍॥ ௪॥

𑌸𑌰𑍍𑌵𑌮𑌙𑍍𑌗𑌲𑌮𑌾𑌙𑍍𑌗𑌲𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌪𑍍𑌰𑌣𑌾𑌶𑌨𑌮𑍍।
𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌶𑍋𑌕𑌪𑍍𑌰𑌶𑌮𑌨 𑌮𑌾𑌯𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌧𑌨 𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑍍॥ ௫॥

𑌰𑌶𑍍𑌮𑌿𑌮𑌨𑍍𑌤𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌦𑍇𑌵𑌾𑌸𑍁𑌰 𑌨𑌮𑌸𑍍𑌕𑍃𑌤𑌮𑍍।
𑌪𑍂𑌜𑌯𑌸𑍍𑌵 𑌵𑌿𑌵𑌸𑍍𑌵𑌨𑍍𑌤𑌂 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑌂 𑌭𑍁𑌵𑌨𑍇𑌶𑍍𑌵𑌰𑌮𑍍॥ ௬॥

ஸ்ரீ.

ஸ்ரீவால்மீகிராமாயணம் யுத்தகாண்டம்.

ஆதித்யஹ்ருதய ஸர்கம்.

(க-உ) பின்பு அனேகர்களோடு வெகு நேரம் யுத்தம் செய்து இளைப்படைந்தவராய், யுத்தம் செய்கைக்காகத் தேரேறி எதிரே வந்து நின்ற இராவணனைப் பார்த்து சிந்தையுற்றவரான ஸ்ரீராமனைக்குறித்து, யுத்தத்தைப் பார்க்கைக்காக தேவதைகளோடு கூடவந்த அகஸ்திய மஹாமுனிவரிட்டவந்து ஒருவார்த்தை சொன்னார்.

(ஙு-ச-ரு) அநேகர்களை வென்ற புஜங்களையுடைய ஓ இராமனே! நீர் இனி விளம்பிக்கலாகாது. ஆதித்யஹ்ருதய மென்று ஒரு ஸ்தோத்ரமுண்டு, அது பரமரஹஸ்யமானது, வேதம்போல் அநாதியாயுள்ளது. தன்னை ஜபம் செய்கிறவனுக்கு மேன்மேல் புண்யத்தை விளைக்கும், சத்ருக்களைப்போக்கும், ஜயத்தைக்கொடுக்கும், அழிவில்லாத பயனையளிக்கும், மிக்க பரிசுத்தமாயிருக்கும், ஸகலபலங்களுக்கும் ஸாதகமாயிருக்கும், ஸர்வபாபங்களையும் போக்கும், ஆதிவ்யாதிகளைத் தணிக்கும். ஆயுஸ்ஸை வளர்த்தும், மற்ற மந்த்ரங்களிற் காட்டில் சிறந்ததாயிருக்கும். இந்தப்பலங்களை யாவனொருவனபேக்ஷிக்கிறானோ, அவனிதைத் தினந்தோறும் ஜபம் செய்யக்கடவன். ஆகையால் நீருமிதை ஜபம் செய்யும், இதனால் ஸகல சத்ருக்களையும் ஜயிப்பீர் (ஆதித்யஹ்ருதயமென்று - ஸூர்யமண்டல மத்யவர்த்தியான ஸ்ரீமந்நாராயணனுடைய அருளைப் பெறுத்தும் ஸ்தோத்ரத்துக்குப் பெயர்).

(சு) சிறந்த கிரணங்களை யுடையனாய், ஸம்பூர்ணமாக உதித்து மேலே கிளம்பினவனாய், ஸகலமான தேவர்களாலும் அசுரர்களாலும் வணங்கப்படுமவனாய், தன்னுடைய காந்தியி

𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌃 𑌸𑌵𑌿𑌤𑌾 𑌸𑍂𑌰𑍍𑌯𑌃 𑌖𑌗𑌃 𑌪𑍂𑌷𑌾 𑌗𑌭𑌸𑍍𑌤𑌿𑌮𑌾𑌨𑍍 ।
*𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌸𑌦𑍃𑌶𑍋 𑌭𑌾𑌨𑍁𑌰𑍍𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌰𑍇𑌤𑌾 𑌦𑌿𑌵𑌾𑌕𑌰𑌃 ॥ ௧௦ ॥

𑌹𑌰𑌿𑌦𑌶𑍍𑌵𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑍍𑌚𑌿𑌃 𑌸𑌪𑍍𑌤𑌸𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌰𑍀𑌚𑌿𑌮𑌾𑌨𑍍 ।
𑌤𑌿𑌮𑌿𑌰𑍋𑌨𑍍𑌮𑌥𑌨𑌃 𑌶𑌮𑍍𑌭𑍁𑌸𑍍𑌤𑍍𑌵𑌷𑍍𑌟𑌾 𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌣𑍍𑌡 𑌅𑌂𑌶𑍁𑌮𑌾𑌨𑍍 ॥ ௧௧ ॥

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌗𑌰𑍍𑌭𑌃 𑌶𑌿𑌶𑌿𑌰𑌸𑍍𑌤𑌪𑌨𑍋 𑌭𑌾𑌸𑍍𑌕𑌰𑍋 𑌰𑌵𑌿𑌃 ।
𑌅𑌗𑍍𑌨𑌿𑌗𑌰𑍍𑌭𑍋𑌽𑌦𑌿𑌤𑍇𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌶𑌙𑍍𑌖𑌃 𑌶𑌿𑌶𑌿𑌰𑌨𑌾𑌶𑌨𑌃 ॥ ௧௨ ॥

𑌵𑍍𑌯𑍋𑌮𑌨𑌾𑌥𑌸𑍍𑌤𑌮𑍋𑌭𑍇𑌦𑍀 𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌃𑌸𑌾𑌮𑌪𑌾𑌰𑌗𑌃 ।
𑌘𑌨𑌵𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑌪𑌾𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 †𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌵𑍀𑌥𑍀𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮𑌃 ॥ ௧௩ ॥

---

* 𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌤𑌪𑌨𑍋 𑌭𑌾𑌨𑍁𑌃 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍.

† 𑌵𑌿𑌨𑍍𑌧𑍍𑌯𑌵𑍀𑌥𑍀𑌃𑌪𑍍𑌲𑌵𑌙𑍍𑌗𑌮𑌃 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍.

(கய) (இப்படி அந்ததேவனுடைய ஸ்வரூபத்தைச்சொல்லி, இனி ஸ்தோத்ரத்தைச் சொல்லுகிறார்) நீ ஸமஸ்தவிஷயங்களையுமநுபவிக்கிறவன். நீ,ஜகத்தை ஸ்ருஷ்டிக்கிறவன், நீ, ஜநங்களைக் கர்மங்களில் ஏவுகிறவன்; நீ, ஆகாசத்தில் ஸஞ்சரிக்கிறவன். நீ, மழையைப் பொழியச்செய்து ஜகத்தைப் போஷிக்கிறவன்; கிரணங்களையுடையவன்; ஸுவர்ணம்போன்ற வர்ணத்தையுடையவன்; ப்ரகாசிக்கிறவன்; ஹிரண்மயமான ப்ரஹ்மாண்டத்தைப் படைத்தவன், தினத்தை உண்டுபண்ணுகிறவன்.

(கக) பச்சைக்குதிரையையுடையவன், ஆயிரம் கிரணங்களையுடையவன் "ஸப்த" என்னும் பெயரையுடைய குதிரையையுடையவன்,ஒளியையுடையவன்,இருளைப்போக்குமவன், சுகத்தைக் கொடுக்கிறவன், ப்ரளயத்தில எல்லாவற்றையும் அழிக்குமவன், ஸகலப்ராணிகளுமழிந்து கிடந்த இந்த அண்டத்தில் மறுபடியும் எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிக்கைக்காக வந்து நின்றவன், ப்ரகாசிக்கிறவன்.

(கஉ) நீ ப்ரஹ்மாண்டத்தை உன்னுடைய உதரத்திலுடையவன் ; ஸம்ஸாரதாபத்திலடிபட்டவர்களுக்குக் குளிர்ந்திருக்குமவன்; ஆஸ்ரிதவிரோதிகளைக் கொளுத்துகிறவன்; எல்லாவஸ்துக்களையும் ப்ரகாசிப்பிக்குமவன்; ஸகலப்ராணிகளினலும் ஸ்துதிக்கப்படுமவன்; அக்நியை உன்னுதரத்திலுடையவன்; அதிதியின்பிள்ளை; மஹாநந்தமுடையவன்; பனியைப்போக்குமவன்.

(கங) ஆகாசத்துக்கு ஸ்வாமி, இராகுவை பேதிக்குமவன்; ருக்கு யஜுஸ்ஸு ஸாமம் என்கிற வேதங்களினுடைய அக்கரையையடைந்தவன்; பெருமழையையுண்டாக்குமவன். ஸமுத்ரசாயி; (தக்ஷிணாயநத்தில்)விந்தியத்தின் வழியாகப்போகிறவன்.

𑌆𑌤𑌪𑍀 𑌮𑌣𑍍𑌡𑌲𑍀 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌃 𑌪𑌿𑌙𑍍𑌗𑌲𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑌾𑌪𑌨𑌃 ।
𑌕𑌵𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍍𑌵𑍋 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌰𑌕𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌭𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌃 ॥ க௪॥

𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰 𑌗𑍍𑌰𑌹𑌤𑌾𑌰𑌾𑌣𑌾 𑌮𑌧𑌿𑌪𑍋 𑌵𑌿𑌶𑍍𑌵𑌭𑌾𑌵𑌨𑌃 ।
𑌤𑍇𑌜𑌸𑌾𑌮𑌪𑌿 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑍀 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌤𑍍𑌮 𑌨𑍍𑌨𑌮𑍋𑌽𑌸𑍍𑌤𑍁 𑌤𑍇 ॥ க௫॥

𑌨𑌮𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌯 𑌗𑌿𑌰𑌯𑍇 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑍇 𑌗𑌿𑌰𑌯𑍇 𑌨𑌮𑌃 ।
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌰𑍍𑌗𑌣𑌾𑌨𑌾𑌂𑌪𑌤𑌯𑍇 𑌦𑌿𑌨𑌾𑌧𑌿𑌪𑌤𑌯𑍇 𑌨𑌮𑌃 ॥ க௬॥

𑌜𑌯𑌾𑌯 𑌜𑌯𑌭𑌦𑍍𑌰𑌾𑌯 𑌹𑌰𑍍𑌯𑌶𑍍𑌵𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।
𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌂𑌶𑍋 𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥ க௭॥

𑌨𑌮 𑌉𑌗𑍍𑌰𑌾𑌯 𑌵𑍀𑌰𑌾𑌯 𑌸𑌾𑌰𑌙𑍍𑌗𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ।
𑌨𑌮𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑌾𑌯 𑌮𑌾𑌰𑍍𑌤𑌾𑌣𑍍𑌡𑌾𑌯 𑌨𑌮𑍋 𑌨𑌮𑌃 ॥ க௮॥

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌶𑌾𑌨𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑍇𑌶𑌾𑌯 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌯𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌰𑍍𑌚𑌸𑍇 ।
𑌭𑌾𑌸𑍍𑌵𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌭𑌕𑍍𑌷𑌾𑌯 𑌰𑍌𑌦𑍍𑌰𑌾𑌯 𑌵𑌪𑍁𑌷𑍇 𑌨𑌮𑌃 ॥ க௯॥

(கச) ஜகந்நிர்மாண ஸங்கல்பத்தையுடையவன்; ஸூர்ய மண்டலத்தை யுடையவன்; விரோதியைப் போக்குமவன்; உதயகாலத்தில் பிங்களவர்ணத்தை யுடையவன்; மத்தியானத்தில் கிரணங்களினுல் தபிப்பிக்குமவன். ஸர்வஜ்ஞன்; ஸர்வ ஸ்வாமி; பெரிய தேஜஸ்ஸை (பராபிபவநஸாமர்த்தியத்தை) யுடையவன்; ப்ரீதியுள்ளவன், ஸமஸ்த ஸம்ஸாரத்துக்கும் காரணமானவன்.

(கரு) அஸ்விந்யாதி நக்ஷத்ரங்களுக்கும், அங்காரகாதி க்ரஹங்களுக்கும், மற்றநக்ஷத்ரங்களுக்கும் ஸ்வாமி; ஜகத்தை நிலைநிறுத்துமவன்; எல்லாதேஜஸ்ஸுக்கும் மிக்கதேஜஸ்ஸை யுடையவன்; ஒருமாஸத்துக்கொன்ருகப் பன்னிரண்டு மூர்த்தியை யுடையவன். இப்படிப்பட்ட உன்னை நான் நமஸ்கரிக்கிறேன்.

(கசு) கிழக்கிலுள்ள உதயகிரியிலுதிக்கிற உனக்கு நமஸ்காரம்; மேற்கிலுள்ள அஸ்தாசலத்தில் அஸ்தமிக்கிற உனக்கு நமஸ்காரம்; ஜ்யோதிர்கணங்களுக்குப் பதியாய் திநத்துக்கு ஸ்வாமியான உனக்கு நமஸ்காரம்.

(கஎ) பராக்ரமசாலியாய், ஆஸ்ரிதர்களுக்கு ஜயத்தையும் மங்களத்தையும் கொடுக்கிறவனுய், பச்சைக்குதிரையை யுடையவனுன உனக்கு நமஸ்காரம்; ஆயிரம் கிரணங்களை யுடையவனே! அதிதியின் பிள்ளையாகிய உனக்கு நமஸ்காரம்.

(கஅ) அபக்தர்களுக்கு க்ரூரனுய், ஜநங்களை நாநாவிதமான கார்யங்களில் ப்ரவர்த்திப்பிக்கிற உனக்கு நமஸ்காரம். பகுவேகமாகப்போகிற உனக்கு நமஸ்காரம். தாமரைப் பூக்களை மலரச்செய்கிற மார்த்தாண்டனுகியஉனக்குநமஸ்காரம்.

(கக) ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களுக்கும், பாலநத்துக்கும் காரணபூதர்களாகிய ப்ரஹ்ம ருத்ரர்களுக்கும் அச்யுதனுக்கும் ஸ்வாமியானுய். ஆதித்யரூபமாகிய தேஜஸ்ஸையுடைய

தமோக்னாய ஹிமக்னாய ஶத்ருக்னாயாமிதாத்மனே ।
க்ருதக்னக்னாய தேவாய ஜ்யோதிஷாம் பதயே நம: ॥ ௨௦ ॥

தப்தசாமீகராபாய * வஹ்னயே விஶ்வகர்மணே ।
நமஸ்தமோऽபிநிக்னாய ருசயே லோகஸாக்ஷிணே ॥ ௨௧ ॥

நாஶயத்யேஷ வை பூதம் ததேவ ஸ்ருஜதி ப்ரபு: ।
பாயத்யேஷ தபத்யேஷ வர்ஷத்யேஷ கபஸ்திபி: ॥ ௨௨ ॥

ஏஷ ஸுப்தேஷு ஜாகர்தி பூதேஷு பரிநிஷ்டித: ।
ஏஷ ஏவாக்னிஹோத்ரம் ச பலம் சைவாக்னிஹோத்ரிணாம்
௨௩ ॥

வேதாஶ்ச க்ரதவஶ்சைவ க்ரதூநாம் பலமேவ ச ।
யானி க்ருத்யானி லோகேஷு ஸர்வ ஏஷ ரவி: ப்ரபு: ॥ ௨௪

---

* ஹரயே விஶ்வகர்மணே இதி பாடாந்தரம்.

ஸூர்யனாகிய உனக்கு நமஸ்காரம், காந்தியை யுடையவனாய், ப்ரளயகாலத்தில் எல்லாவற்றையும்ஸம்ஹாரம்செய்கிறவனாய் அதற்காக அப்போது அதிக்ரூரமான வடிவையுடையவனான உனக்கு நமஸ்காரம்.

(உ0) இருளை ஹரிக்குமவனாய், பனியைப் போக்குமவனாய், சத்ருக்களை யழிக்குமவனாய், அபரிச்சிந்ந ஸ்வரூபனாய், செய்த உபகாரத்தையறியாத க்ருதக்நனை நசிப்பிக்குமவனாய், தீப்தியையுடையவனாய், நக்ஷத்ராதிஜ்யோதிர்கணங்களுக்குப் பதியான உனக்கு நமஸ்காரம்.

(உக) ஸுவர்ணம் போன்ற காந்தியை யுடையவனாய், அக்நிஸ்வரூபியாய், ஸகல ஜகத்தையும் ஸ்ருஷ்டிக்கிறவனாய், அஜ்ஞாந நாசகனாய், ப்ரியகரனாய், ஜநங்களுடைய புண்ய பாபங்களுக்கு ஸாக்ஷியாயிருக்கிற உனக்கு நமஸ்காரம்.

(உஉ) (இப்படி ஸ்தோத்ரத்தை முடித்துப் பின்னும் அந்ததேவனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுகிறார்)—இந்த தேவனே மஹாப்ரளயத்தில் ஜகத்தை யழிக்கிறான், ஸ்ருஷ்டியினாதியில் ஸ்ருஜிக்கிறான், இவனே பாலநம்செய்கிறான். இவனே தன்கிரணங்களினால் நீரை வறட்டுகிறான், தபிப்பிக்கிறான், இவனே மழைபெய்யச் செய்கிறான்.

(உங) இந்ததேவன், ஜநங்கள் உறங்கும்பொழுது அவர்களுக்கு அந்தர்யாமியா யிருந்து விழித்துக்கொண் டிருக்கிறான். இவனே அக்நிஹோத்ராதி கர்மங்களைச்செய்விக்கிறான். அவர்களுக்கு அவற்றின் பலத்தைக் கொடுக்கிறான்.

(உச) இவனே ஸகல வேதங்களுக்கும் பொருளானவன். ஸகல யஜ்ஞங்களினாலும் ஆராதிக்கத்தக்கவன். அவற்றின் பலத்தைக் கொடுக்கிறவன். ஸகல தேவதாஸ்வரூபியாய் இந்த ஸூர்ய மண்டலாந்தர்வர்த்தியான ஸர்வேஶ்வரனே, ஸமஸ்தமான லௌகிககர்மங்களையும் செய்வித்து அவற்றுக்குப்பலத்தையு மளிக்கிறான்.

𑌏𑌨𑌮𑌾𑌪𑌤𑍍𑌸𑍁 𑌕𑍃𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌷𑍁 𑌕𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍇𑌷𑍁 𑌭𑌯𑍇𑌷𑍁 𑌚 ।
𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌨𑍍 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌕𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌨𑌾𑌵𑌸𑍀𑌦𑌤𑌿 𑌰𑌾𑌘𑌵 ॥ ௨௫ ॥
𑌪𑍂𑌜𑌯𑌸𑍍𑌵𑍈𑌨𑌮𑍇𑌕𑌾𑌗𑍍𑌰𑍋 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌂 𑌜𑌗𑌤𑍍𑌪𑌤𑌿𑌮𑍍 ।
𑌏𑌤𑌤𑍍 𑌤𑍍𑌰𑌿𑌗𑍁𑌣𑌿𑌤𑌂 𑌜𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇𑌷𑍁 𑌵𑌿𑌜𑌯𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ॥ ௨௬ ॥
𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌕𑍍𑌷𑌣𑍇 𑌮𑌹𑌾𑌬𑌾𑌹𑍋 𑌰𑌾𑌵𑌣𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌵𑌧𑌿𑌷𑍍𑌯𑌸𑌿 ।
𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑌦𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑍋 𑌜𑌗𑌾𑌮 𑌚 𑌯𑌥𑌾𑌗𑌤𑌮𑍍 ॥ ௨௭ ॥
𑌏𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌤𑍇𑌜𑌾 𑌨𑌷𑍍𑌟𑌶𑍋𑌕𑍋𑌽𑌭𑌵𑌤𑍍𑌤𑌦𑌾 ।
𑌧𑌾𑌰𑌯𑌾𑌮𑌾𑌸 𑌸𑍁𑌪𑍍𑌰𑍀𑌤𑍋 𑌰𑌾𑌘𑌵𑌃 𑌪𑍍𑌰𑌯𑌤𑌾𑌤𑍍𑌮𑌵𑌾𑌨𑍍 ॥ ௨௮ ॥
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌜𑌪𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌪𑌰𑌂 𑌹𑌰𑍍𑌷𑌮𑌵𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌰𑌾𑌚𑌮𑍍𑌯 𑌶𑍁𑌚𑌿𑌰𑍍𑌭𑍂𑌤𑍍𑌵𑌾 𑌧𑌨𑍁𑌰𑌾𑌦𑌾𑌯 𑌵𑍀𑌰𑍍𑌯𑌵𑌾𑌨𑍍 ॥ ௨௯ ॥
𑌰𑌾𑌵𑌣𑌂 𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌹𑍃𑌷𑍍𑌟𑌾𑌤𑍍𑌮𑌾 𑌯𑍁𑌦𑍍𑌧𑌾𑌯 𑌸𑌮𑍁𑌪𑌾𑌗𑌮𑌤𑍍 ।
𑌸𑌰𑍍𑌵𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌮𑌹𑌤𑌾 𑌵𑌧𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌧𑍃𑌤𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 ॥ ௩௦ ॥

𑌅𑌥 𑌰𑌵𑌿𑌰𑌵𑌦𑌨𑍍𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌰𑌾𑌮𑌂
𑌮𑍁𑌦𑌿𑌤𑌮𑌨𑌾𑌃 𑌪𑌰𑌮𑌂 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌃 ।
𑌨𑌿𑌶𑌿𑌚𑌰𑌪𑌤𑌿𑌸𑌂𑌕𑍍𑌷𑌯𑌂 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾
𑌸𑍁𑌰𑌗𑌣𑌮𑌧𑍍𑌯𑌗𑌤𑍋 𑌵𑌚𑌸𑍍𑌤𑍍𑌵𑌰𑍇𑌤𑌿 ॥ ௩௧ ॥

*𑌇𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌷𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌆𑌦𑌿𑌕𑌾𑌵𑍍𑌯𑍇 𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑍇
𑌆𑌦𑌿𑌤𑍍𑌯𑌹𑍃𑌦𑌯𑌂 𑌨𑌾𑌮 𑌸𑌪𑍍𑌤𑍋𑌤𑍍𑌤𑌰𑌶𑌤𑌤𑌮𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃*

(𑌸 𑌰𑌥𑌂 𑌸𑌾𑌰𑌥𑌿𑌰𑍍𑌹𑍃𑌷𑍍𑌟𑌃 𑌪𑌰𑌸𑍈𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌧𑌰𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌨𑌗𑌰𑌾𑌕𑌾𑌰𑌂 𑌸𑌮𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌿𑌤𑌪𑌤𑌾𑌕𑌿𑌨𑌮𑍍 ॥)

(உ௫) ஓ, ஸ்ரீராமனே! இப்படி இந்த ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்ரத்தை, யாவனொருவன் ஆபத்காலங்களிலும் கஷ்ட காலங்களிலும், காடுகளிலும், பயம் நேரிடும் காலங்களிலும் சொல்லுகிறானோ, அவன் வருத்தமுறான்.

(உ௬) நீரும், ஸகல தேவர்களுக்கும் தேவனாய், ஜகத்துக்கு ஸ்வாமியான ஸூர்யனைப்பூஜியும். இதை மூன்றுதரம் ஜபித்து யுத்தத்தில் விஜயத்தை யடையப்போகிறீர்.

(உ௭) இப்பொழுதே இராவணனைக் கொல்லப்போகிறீர். என்று அகஸ்த்யமஹாமுனிவர் இராகவனுக்குச் சொல்லிவிட்டுத் தான் வந்தபடியே திரும்பிப்போய்விட்டார்.

(உ௮) இராகவன் இதைக்கேட்டு அப்பொழுது துயரமற்றவராய் மஹாதேஜஸ்ஸை யுடையவரானார். பஹுப்ரீதியுடன் ஜிதேந்த்ரியராய் இந்தஸ்தோத்ரத்தை மனதில்தரித்தார்.

(உ௯-௩௦) மூன்றுதரம் ஆசமநம் செய்து பரிசுத்தராய்க்கொண்டு ஸூர்யனைப் பார்த்து இதை ஜபம் செய்து பெரிய ஸந்தோஷத்தை யடைந்தவராய், பின்பு பகுபராக்கிரமசாலியாய் வில்லை யெடுத்துக்கொண்டு இராவணனைப்பார்த்து மனக்களிப்புற்றவராய், யுத்தத்துக்குவந்து, எவ்விதத்திலாவது இவ்விராவணனைக்கொல்லவேண்டுமென்றுநிலைநின்றவரானார்.

(௩௧) பின்பு, யுத்தம் பார்க்கவந்த தேவதைகளின் நடுவேநின்றஸூர்யன்,இராகவன்பண்ணினஜபத்தினால் ஸந்தோஷமடைந்து, உடம்பில் மயிரெழுந்தவனாய், இராகவனைப்பார்த்து, நீர் இராவணனை ஜயிக்கக்கடவீ ரென்றநுக்ரஹித்து, இனிக்காலவிளம்பம் செய்யவேண்டாம், சீக்கிரமாக யுத்தம் செய்து இராவணனைக் கொல்லு மென்று சொன்னான்.

ஆதித்ய ஹ்ருதயஸர்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 - 𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑍇

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑌵𑌸𑌾𑌰𑌃.

𑌤𑌤𑍋 𑌹𑌿 𑌦𑍁𑌰𑍍𑌮𑌨𑌾 𑌰𑌾𑌮𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑍈𑌵 𑌵𑌦𑌤𑌾𑌂 𑌗𑌿𑌰𑌃 ।
𑌦𑌧𑍍𑌯𑍌 𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌬𑌾𑌷𑍍𑌪𑌵𑍍𑌯𑌾𑌕𑍁𑌲𑌲𑍋𑌚𑌨𑌃 ॥
௧

𑌤𑌤𑍋 𑌵𑍈𑌶𑍍𑌰𑌵𑌣𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌯𑌮𑌶𑍍𑌚 𑌪𑌿𑌤𑍃𑌭𑌿𑌸𑍍𑌸𑌹 ।
𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌕𑍍𑌷𑍋 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌵𑌰𑍁𑌣𑌶𑍍𑌚 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪𑌃 ॥ ௨

𑌷𑌡𑌰𑍍𑌧𑌨𑌯𑌨𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑍋 𑌵𑍃𑌷𑌧𑍍𑌵𑌜𑌃 ।
𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌾𑌂 𑌵𑌰𑌃 ॥ ௩
𑌏𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌸𑌮𑌾𑌗𑌮𑍍𑌯 𑌵𑌿𑌮𑌾𑌨𑍈𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑍈𑌃 ।
𑌆𑌗𑌮𑍍𑌯 𑌨𑌗𑌰𑍀𑌂 𑌲𑌙𑍍𑌕𑌾𑌮𑌭𑌿𑌜𑌗𑍍𑌮𑍁𑌶𑍍𑌚 𑌰𑌾𑌘𑌵𑌮𑍍 ॥ ௪

𑌤𑌤𑌸𑍍𑌸𑌹𑌸𑍍𑌤𑌾𑌭𑌰𑌣𑌾𑌨𑍍 𑌪𑍍𑌰𑌗𑍃𑌹𑍍𑌯 𑌵𑌿𑌪𑍁𑌲𑌾𑌨𑍍 𑌭𑍁𑌜𑌾𑌨𑍍 ।
𑌅𑌬𑍍𑌰𑍁𑌵𑌂𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌃 𑌪𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌂 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ॥ ௫
𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑌾𑌂 𑌵𑌰𑌃 ।
𑌉𑌪𑍇𑌕𑍍𑌷𑌸𑍇 𑌕𑌥𑌂 𑌸𑍀𑌤𑌾𑌂 𑌪𑌤𑌨𑍍𑌤𑍀𑌂 𑌹𑌵𑍍𑌯𑌵𑌾𑌹𑌨𑍇 ॥ ௬ ॥
𑌕𑌥𑌂 𑌦𑍇𑌵𑌗𑌣𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌮𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌨𑌾𑌵𑌬𑍁𑌧𑍍𑌯𑌸𑍇 ।
𑌋𑌤𑌧𑌾𑌮𑌾 𑌵𑌸𑍁𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌵𑌸𑍂𑌨𑌾𑌂 𑌚 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ॥
௭

ஸ்ரீ.

ஸ்ரீவால்மீகிராமாயணம் யுத்தகாண்டம்.

ஸ்ரீராமஸ்தவ ஸர்கம்.

(க) தர்மாத்மாவாகிய இராமன், ஸீதாதேவி அக்நிப்ர வேசம்செய்தபோது ஜநங்கள் சொன்னசொற்களைக்கேட்டுத் துன்ப முற்றவராய், கண்ணீர் நிறைந்த கண்களையுடையவ ராய்க்கொண்டு, நாமென்ன க்ரூரகாரியம் செய்தோம் என்று முகூர்த்தகாலம் சிந்தித்துக்கொண்டிருந்தனர்.

(உ-ங-ச) பின்பு, குபேரன், சத்துருக்களையழிக்கவல்ல இயமன், ஆயிரம் கண்களையுடைய இந்திரன், எதிரிகளை யெ ரிக்கவல்ல வருணன், முக்கண்ணனாய், எருதுக்கொடியை யு டையவனாய், காந்தியை யுடையனான மஹாதேவன், ஸகல லோகஸ்ரஷ்டாவாய், ப்ரஹ்மவித்துக்களில் தலைவரான ப்ர ஹ்மா, இவர்களெல்லாம், ஸூர்யன்போல் விளங்குகிற தங்கள் விமாநங்களின்மேலே ஏறிக்கொண்டு வந்து இலங்கையை யடைந்து இராகவனிடம் சென்றார்கள்.

(ரு) பின்பு அந்த தேவதைகள் தங்களுடைய பரந்தும் ஆபரணங்களோடு கூடியு மிருக்கிற கைகளை உயரவெடுத்து, கைகூப்பி நிற்கிற இராகவனைப்பார்த்துச் சொன்னார்கள்.

(சு) ஓ, இராகவனே! ஸர்வலோக ஸ்ரஷ்டாவாய், ஸர்வ ஜ்ஞரான நீர், நெருப்பில் குதித்த ஸீதாதேவியை ஏன் உபே க்ஷை செய்கிறீர்?

(சுஅ) ஸமஸ்த தேவர்களைக்காட்டிலும் சிரேஷ்ட்டரான உம்மை நீர் ஏன் அறியவில்லை?

(எ) நீர், முதலில் அஷ்ட வஸுக்களுக்கும் ஸகலஜநங்க ளுக்கும் ஸ்வாமியாய் 'ருததாமா' என்று பெயரையுடைய வஸுவாகிறீர்.

𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂 𑌤𑍍𑌵𑌂 𑌹𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌮𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌭𑍁𑌃।
𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌮𑌷𑍍𑌟𑌮𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌪𑌞𑍍𑌚𑌮𑌃॥௮

𑌅𑌶𑍍𑌵𑌿𑌨𑍌 𑌚𑌾𑌪𑌿 𑌤𑍇 𑌕𑌰𑍍𑌣𑍌 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍂𑌰𑍍𑌯𑍌 𑌚 𑌚𑌕𑍍𑌷𑍁𑌷𑍀।
𑌅𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌦𑍌 𑌚 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌸𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪॥௯

𑌉𑌪𑍇𑌕𑍍𑌷𑌸𑍇 𑌚 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍃𑌤𑍋 𑌯𑌥𑌾
௯॥

𑌇𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑍈𑌸𑍍𑌤𑍈𑌸𑍍𑌸𑍍𑌵𑌾𑌮𑍀 𑌲𑍋𑌕𑌸𑍍𑌯 𑌰𑌾𑌘𑌵𑌃
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌦𑌶𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌾𑌨𑍍 𑌰𑌾𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌭𑍃𑌤𑌾𑌂 𑌵𑌰𑌃। ௧௦॥
𑌆𑌤𑍍𑌮𑌾𑌨𑌂 𑌮𑌾𑌨𑍁𑌷𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌰𑌾𑌮𑌂 𑌦𑌶𑌰𑌥𑌾𑌤𑍍𑌮𑌜𑌮𑍍॥
𑌯𑍋𑌽𑌹𑌂 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌤𑌶𑍍𑌚𑌾𑌹𑌂 𑌭𑌗𑌵𑌾𑌂𑌸𑍍𑌤𑌦𑍍𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑍁 𑌮𑍇। ௧௧॥

𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑍁𑌵𑌨𑍍𑌤𑌂 𑌕𑌾𑌕𑍁𑌤𑍍𑌸𑍍𑌥𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑌾𑌂 𑌵𑌰𑌃॥
𑌅𑌬𑍍𑌰𑌵𑍀𑌚𑍍𑌛𑍃𑌣𑍁 𑌮𑍇 𑌰𑌾𑌮 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮 ।௧௨

𑌭𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌦𑍇𑌵𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌂𑌶𑍍𑌚𑌕𑍍𑌰𑌾𑌯𑍁𑌧𑍋 𑌵𑌿𑌭𑍁𑌃
𑌏𑌕𑌶𑍃𑌙𑍍𑌗𑍋 𑌵𑌰𑌾𑌹𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌭𑍂𑌤𑌭𑌵𑍍𑌯𑌸𑌪𑌤𑍍𑌨𑌜𑌿𑌤𑍍॥௧௩॥

(அ) நீர், மூன்றுலகங்களையும் படைத்தீர். உமக்குமேற்பட்டா ரொருவருமில்லை. ஏகாதசருத்ரர்களில் நீர்மஹாதேவனென்ற எட்டாவது ருத்ரன். ஸாத்யர்களில் வீர்யவானென்ற ஐந்தாமவன்.

(கூ) அஶ்விநி தேவர்கள் உம்முடைய காதுகள். சந்திரஸூர்யர்கள், உம்முடையகண்கள். உலகங்கள் நசித்தபின்னும் உண்டாவதற்கு முன்னும் உற்பத்தி விநாசங்க ளற்றவராய், மஹர்ஷிகளினால் காணப்படுகிறீர்?

(கூ0) இப்படியிருக்க கேவலம் ப்ராக்ருதனான மநுஷ்யனைப்போல் ஸீதையை ஏன் உபேக்ஷிக்கிறீர்.

(க0,0) இப்படி தேவர்கள் சொன்னபின், பரமதார்மிகராய் ஸகல ஜகத்ஸ்வாமியான இராகவன் அந்த தேவர்களைப் பார்த்துச் சொன்னார்.

(கக0) நான் என்னை தசரதமஹாராஜபுத்ரனாகிய இராமனென்று பெயரையுடைய மனுஷ்யனாகவே யெண்ணுகிறேன். நான்யார், இவ்வுலகத்துக்கும் எனக்கு மென்ன ஸம்பந்தம், எதுக்காக நானிங்கே பிறந்தேன், அதை நீங்கள் எனக்குத் தெரிய உரையுங்கோள் என்றார்.

(கஉ0) இப்படி சொன்ன இராகவனைப்பார்த்து, ப்ரஹ்மவித்துக்களில் சிறந்தவரான ப்ரஹ்மா, அழிவற்ற பராக்ரமத்தையுடைய ஓ, ஸ்ரீராமனே! நா னும்முடைய உண்மையைச் சொல்லுகிறேன் கேளும் என்றார்.

(கஙு0) நீர், ஸகல ஜகத்காரண பூதரான நாராயணன், ஸ்ரிய:பதி, சக்ரத்தை ஆயுதமாக உடையவர், வ்யாபகர், எப்போதும் விளங்குகிறவர், முன் ஒற்றைக்கொம்பை யுடைய வராஹமாயவதரித்து பூமியை உத்தரிப்பித்தவர். முன்புள்ள மதுகைடபாதிகளும் இனிப்பிறக்கப்போகிற சிசுபாலாதிகளுமாகிற சத்ருக்களை ஜயிக்குமவர்.

𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚𑌾𑌨𑍍𑌤𑍇 𑌚 𑌭𑌾𑌵𑌵𑌃 ।
𑌲𑍋𑌕𑌾𑌨𑌾𑌂𑌕𑍍𑌷𑌂𑌵𑌭𑍋𑌯𑌦𑍍𑌭𑍋 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥𑌿𑌵𑌃 ॥ ௧௪ ॥

𑌶𑌾𑌰𑍍𑌙𑌗𑌧𑌨𑍍𑌵𑌾 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃
𑌅𑌜𑌿𑌤𑌃 𑌖𑌡𑍍𑌗𑌧𑍃𑌗𑍍 𑌜𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌶𑍍𑌚𑍈𑌵 𑌬𑍃𑌹𑌦𑍍𑌬𑌲𑌃 ॥ ௧௫ ॥

𑌸𑍇𑌨𑌾𑌨𑍀 𑌗𑍍𑌰𑌾𑌮𑌣𑍀𑌸𑍍𑌤𑍁 𑌕𑍍𑌷𑌂 𑌪𑌾𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑌂 𑌕𑍍𑌷𑌮𑍋 𑌧𑍃𑌤𑌿𑌃 ।
𑌪𑍍𑌰𑌭𑌵𑌸𑍍𑌤𑌾 𑌪𑍍𑌯𑌯𑌸𑍍𑌤𑍁𑌕𑍍𑌷 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑍋 𑌮𑌯 𑌪𑍁𑌨 𑌦𑍁𑌦𑍇𑌨𑌃 ॥ ௧௬ ॥

𑌉𑌦𑍍𑌗𑍍𑌰𑌾𑌮 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑌦𑍍𑌮𑌨𑌾𑌭𑍋 𑌭𑌣𑌾𑌙𑌕𑍍𑌷𑍃𑌤𑌃 ।
𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌶𑌰𑌣𑌂𑌚 𑌕𑍍𑌷𑌾 𑌮𑌾𑌹𑍁 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾 𑌮𑌹𑌰𑍍𑌷𑌯𑌃 ॥ ௧௭ ॥

𑌸𑌹𑌸𑍍𑌰𑌶𑍀𑌰𑍍𑌷𑍋 𑌦𑍇𑌵𑌾𑌦𑍍𑌯𑌾 𑌶𑌤𑌜𑌿𑌹𑍍𑌵𑍋 𑌮𑌹𑌰𑍍𑌷𑌭𑌃 ।
𑌕𑍍𑌷𑌂 𑌤𑍍𑌰𑌯𑌾𑌣𑌾𑌂𑌹𑌿 𑌲𑍋𑌕𑌾𑌨𑌾 𑌮𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌤𑌾 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌭𑍁𑌃 ।
𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌸𑌾𑌧𑍍𑌯𑌾𑌨𑌾 𑌮𑌾𑌶𑍍𑌰𑌯 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿 𑌪𑌦𑍍𑌮𑌜𑌃 ॥ ௧௮ ॥

(கச௨) க்ஷயமில்லாதவர், அபரிச்சிந்நமான ஸ்வரூபஸ்வபாவங்களை யுடையவர். ஜந்மாதிவிகார மற்றவர்,ஆதிமத்யாவஸாநங்களி லுள்ளவர், ஸர்வப்ராணிகளுடைய ஸகல புருஷார்த்தங்களுக்கும் ஸாதனமானவர், நாற்புறங்களிலும் ஸேனையையுடைய ஸர்வஸ்வாமி, தர்மார்த்த காம மோக்ஷங்களாகிற நான்கு புருஷார்த்தங்களையு மேககாலத்திலேகொடுக்கத்தக்க நான்கு புஜங்களை யுடையவர்.

(கரு௨) சார்ங்கமென்னும் வில்லையுடையவர். இந்த்ரியங்களை நியமிக்கவல்லவர். ஹ்ருதய குஹையில் வாஸம் செய்கிறவர். ஸமஸ்த புருஷர்களைக்காட்டிலும் சிறந்தவர். ஒருவரால் ஜயிக்கப்படாதவர். நந்தக மென்னும் கத்தியையுடையவர். ஸர்வவ்யாபி, ஐஹிகா முஷ்மிகங்களைக் கொடுக்கவல்லவர். பெரிய ஸாமர்த்தியத்தை யுடையவர்.

(கசு௨) தேவஸேனைகளுக்குநிர்வாஹகர், தேசங்களுக்கு நிர்வாஹகர். புத்தி,ஸத்வம்,பொறை, இந்த்ரியநிக்ரஹம்ஆகிய இவைகளைக் கொடுக்கவல்லவர். ஜகத்துக்கு உபாதாந காரணமானவர். லயஸ்த்தாநமானவர். இந்த்ரனுடைய தம்பியாக அவதரித்த உபேந்திரர். மதுவென்ற அசுரனைக்கொன்றவர்.

(கஎ௨) இந்த்ரனுக்கு அந்தர்யாமியா யிருந்து அவனுடைய கர்மங்களைச்செய்விக்குமவர். அகண்டைஶ்வர்யமுடையவர். நாபியில் கமலப்பூவையுடையவர். யுத்தத்தில் சத்ருக்களைக் கொல்லுமவர். ரக்ஷோபயோகியான தயாதிகுணங்களை யுடையவரென்றும், ரக்ஷகரென்றும்,உம்மை ஸநகாதி மஹர்ஷிகள் சொல்லுகிறார்கள்.

(கஅ-கக) ஆயிரம் சாகைகளாகிற கொம்புகளையும், அநேகமானவிதிகளாகிற நாக்குக்களையும்,மஹத்தான ஆலோசனையையுமுடைய தேவஸ்வரூபியானவர். நீர் மூன்றுலகங்களையும் முதலிலே படைத்தவர். உமக்கு மேற்பட்ட யஜமா

𑌤𑍍𑌵𑌂 𑌯𑌜𑍍𑌞𑌸𑍍𑌤𑍍𑌵𑌂 𑌵𑌷𑌟𑍍𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑍋𑌂𑌕𑌾𑌰𑌃 𑌪𑌰𑌂𑌤𑌪𑌃 ।
𑌪𑍍𑌰𑌭𑌵𑌂 𑌨𑌿𑌧𑌨𑌂 𑌵𑌾 𑌤𑍇 𑌨 𑌵𑌿𑌦𑍁𑌃 𑌕𑍋 𑌭𑌵𑌾𑌨𑌿𑌤𑌿 ॥ ௨௦

𑌦𑍃𑌶𑍍𑌯𑌸𑍇 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑍇𑌷𑍁 𑌬𑍍𑌰𑌾𑌹𑍍𑌮𑌣𑍇𑌷𑍁 𑌚 𑌗𑍋𑌷𑍁 𑌚
𑌦𑌿𑌕𑍍𑌷𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍁 𑌗𑌗𑌨𑍇 𑌪𑌰𑍍𑌵𑌤𑍇𑌷𑍁 𑌵𑌨𑍇𑌷𑍁 𑌚॥௨௧
𑌸𑌹𑌸𑍍𑌰𑌚𑌰𑌣𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌶𑌤𑌶𑍀𑌰𑍍𑌷𑌃 𑌸𑌹𑌸𑍍𑌰𑌦𑍃𑌕𑍍 ।
𑌤𑍍𑌵𑌂 𑌧𑌾𑌰𑌯𑌸𑌿 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌵𑌸𑍁𑌧𑌾𑌂 𑌚 𑌸𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌮𑍍॥௨௨
𑌅𑌨𑍍𑌤𑍇 𑌪𑍃𑌥𑌿𑌵𑍍𑌯𑌾𑌃 𑌸𑌲𑌿𑌲𑍇 𑌦𑍃𑌶𑍍𑌯𑌸𑍇 𑌤𑍍𑌵𑌂 𑌮𑌹𑍋𑌰𑌗𑌃।
𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍𑌰𑌾𑌮 𑌦𑍇𑌵𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌦𑌾𑌨𑌵𑌾𑌨𑍍॥௨௩

𑌅𑌹𑌂 𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌂 𑌰𑌾𑌮 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 । [௨௪॥
𑌦𑍇𑌵𑌾 𑌗𑌾𑌤𑍍𑌰𑍇𑌷𑍁 𑌰𑍋𑌮𑌾𑌣𑌿 𑌨𑌿𑌰𑍍𑌮𑌿𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌪𑍍𑌰𑌭𑍋
𑌨𑌿𑌮𑍇𑌷𑌸𑍍𑌤𑍇 𑌭𑌵𑍇𑌦𑍍𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌰𑍁𑌨𑍍𑌮𑍇𑌷𑌸𑍍𑌤𑍇 𑌭𑌵𑍇𑌦𑍍𑌦𑌿𑌵𑌾।
𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌭𑌵𑌨𑍍𑌵𑍇𑌦𑌾 𑌨 𑌤𑌦𑌸𑍍𑌤𑌿 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌵𑌿𑌨𑌾॥ ௨௫॥
𑌜𑌗𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌶𑌰𑍀𑌰𑌂 𑌤𑍇 𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌵𑌸𑍁𑌧𑌾𑌤𑌲𑌮𑍍।
𑌅𑌗𑍍𑌨𑌿𑌃 𑌕𑍋𑌪𑌃 𑌪𑍍𑌰𑌸𑌾𑌦𑌸𑍍𑌤𑍇 𑌸𑍋𑌮𑌃𑌶𑍍𑌰𑍀𑌵𑌤𑍍𑌸𑌲𑌕𑍍𑌷𑌣𑌃॥ ௨௬॥

ன்னை யுடைத்தாகாதவர். முக்தர்களுக்கும் நித்யர்களுக்கும் ஆதாரபூதர். முதலிலே யுண்டானவர்.

(௨0) நீர் யஜ்ஞங்களையும் அவற்றினங்கங்களான ஸ்ருக்முதலானவைகளையும் ஸ்வரூபமாக உடையவர். வஷட்காரம்முதலியவற்றினல் பூஜிக்கப்படுமவர். ப்ரணவப்ரதிபாத்யர். உத்க்ருஷ்டமான தபஸ்ஸை ஸ்வரூபமாக உடையவர். உம்முடைய ஜநநமரணங்களை ஆருமறியார். நீரின்னாரென்றுமாருமறியார்.

(௨௧) ப்ராஹ்மணர், பசுக்கள், திக்குக்கள், ஆகாயம், மலைகள், மரங்கள் முதலிய ஸகலவஸ்துக்களிலும் அந்தர்யாமியாகக் காணப்படுமவர்.

(௨௨) அநேகம் பாதங்களையும், அநேகம் சிரஸ்ஸுக்களையும், அநேகம் கண்களையும் உடைய ஸ்ரியஃபதி, நீர், மலை பூமி ஜலம் முதலிய ஸகல பூதங்களையும் தரிக்கிறீர்.

(௨௩) ஓ, ஸ்ரீராமனே! நீர், ப்ரளயகாலத்தில் மூன்றுலகங்களையும் அவற்றிலுள்ள தேவாதி ஸகலப்ராணிகளையும் வயிற்றில் வைத்துக்கொண்டு மஹாஸமுத்திரத்தில் ஆதிசேஷன்மேல் படுத்திருக்குமவர்.

(௨௪) ஓ, இராகவனே! நான்பரப்ரஹ்மரூபியான உமக்கு மார்பு, ஸரஸ்வதி நாக்கு, தேவர்கள் உடம்பிலுள்ள மயிர்கள்.

(௨௫) நீர் கண்ணை மூடுவது இரவு, கண்ணைத்திறப்பது பகல், வேதங்கள் உம்முடைய மூச்சுக்கள். உம்மைவிட்டுப் பிரிந்த வஸ்து ஒன்றுமே கிடையாது.

(௨௬) ஸகல ஜகத்தும் உமக்குச்சரீரம். (அதாவது அவற்றுக்கு நீரே ஆதாரமும் ஸ்வாமியும், அவை நீரிட்டவழக்காயிருக்கும்). பூமி உம்முடைய ஸ்த்தைர்யம். அக்நியினுடைய தாபம் உம்முடைய கோபம். சந்திரனுடைய குளிர்ச்சிஉம்முடைய அநுக்ரஹம். நீர் ஸ்ரீவத்ஸம் என்ற மறுவையுடையவர்.

𑌤𑍍𑌵𑌯𑌾 𑌲𑍋𑌕𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑌃 𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌾𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑍇 𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌭𑌿𑌃
𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍍𑌚 𑌕𑍃𑌤𑍋 𑌰𑌾𑌜𑌾 𑌬𑌲𑌿𑌂 𑌬𑌦𑍍𑌧𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌸𑍁𑌰𑌮𑍍 ॥௨௭॥

𑌸𑍀𑌤𑌾 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀 𑌰𑍍𑌭𑌵𑌾 𑌨𑍍𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌰𑍍𑌦𑍇𑌵𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌃 ।
𑌵𑌧𑌾𑌰𑍍𑌥𑌂 𑌰𑌾𑌵𑌣𑌸𑍍𑌯𑍇𑌹 𑌪𑍍𑌰𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌮𑌾𑌨𑍁𑌷𑍀𑌂 𑌤𑌨𑍁𑌮𑍍 ॥௨௮॥

𑌤𑌦𑌿𑌦𑌂 𑌨𑌃 𑌕𑍃𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾 𑌧𑌰𑍍𑌮𑌭𑍃𑌤𑌾𑌂 𑌵𑌰 ।
𑌨𑌿𑌹𑌤𑍋 𑌰𑌾𑌵𑌣𑍋 𑌰𑌾𑌮 𑌪𑍍𑌰𑌹𑍃𑌷𑍍𑌟𑍋 𑌦𑌿𑌵𑌮𑌾𑌕𑍍𑌰𑌮 ॥௨௯॥
𑌅𑌮𑍋𑌘𑌂 𑌬𑌲𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌤𑍇 𑌅𑌮𑍋𑌘𑌸𑍍𑌤𑍇 𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌃 ।
𑌅𑌮𑍋𑌘𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 𑌰𑌾𑌮 𑌨 𑌚 𑌮𑍋𑌘𑌃 𑌸𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑌵 ॥ ௩௰॥

𑌅𑌮𑍋𑌘𑌾𑌸𑍍𑌤𑍇 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌭𑌕𑍍𑌤𑌿𑌮𑌨𑍍𑌤𑍋 𑌹𑌿 𑌯𑍇 𑌨𑌰𑌾𑌃 ॥௩௰௧॥
𑌯𑍇 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌦𑍇𑌵𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌂 𑌭𑌕𑍍𑌤𑌾𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑌂 𑌪𑍁𑌰𑍁
[𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌨𑍁𑌵𑌨𑍍𑌤𑌿 𑌸𑌦𑌾 𑌕𑌾𑌮𑌾 𑌨𑌿𑌹𑌲𑍋𑌕𑍇 𑌪𑌰𑌤𑍍𑌰 𑌚 ॥௩௰௨॥
𑌇𑌮𑌮𑌾𑌰𑍍𑌷𑌂 𑌸𑍍𑌤𑌵𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌿𑌹𑌾𑌸𑌂 𑌪𑍁𑌰𑌾𑌤𑌨𑌮𑍍 ।
𑌯𑍇 𑌨𑌰𑌾𑌃 𑌕𑍀𑌰𑍍𑌤𑌯𑌿𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌪𑌰𑌾𑌭𑌵𑌃 ॥ ௩௰௩

*𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇 𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑍇 𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌸𑍍𑌤𑍁𑌤𑌿𑌰𑍍𑌨𑌾𑌮
𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌰𑌶𑌤𑌤𑌮𑌸𑍍𑌸𑌰𑍍𑌗𑌃.*

{ 𑌏𑌤𑌚𑍍𑌛𑍍𑌰𑍁𑌤𑍍𑌵𑌾 𑌶𑍁𑌭𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌸𑌮𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌅𑌙𑍍𑌕𑍇 𑌨𑌾𑌦𑌾𑌯 𑌵𑍈𑌦𑍇𑌹𑍀𑌮𑍁𑌤𑍍𑌪𑌪𑌾𑌤 𑌵𑌿𑌭𑌾𑌵𑌸𑍁𑌃 ॥ }

(௨எ) நீர் முற்காலத்தில் த்ரிவிக்ரமாவதார மெடுத்து மூன்றுலகங்களேயும் உம்முடைய மூன்றடிகளினு லாக்ரமித்து மாவலியைச் சிறையில் வைத்து அவ்வுலகங்களை இந்திரனுக்குக் கொடுத்தீர்.

(௨அ) இந்தஸீதை ஸாக்ஷாத் லக்ஷ்மீதேவி, நீர் விஷ்ணுமூர்த்தி, இனி யவதரிக்கப்போகிற க்ருஷ்ணனும் நீரே. ப்ரஜாநாதனென்பவரும் நீரே. இராவணனைக் கொல்லுகைக்காக் இவ்வுலகினில் இம்மானிட உருவை வஹித்தீர்.

(௨௯) பரமதார்மிகரான ஓ, இராகவனே! இராவணனை முடித்து எங்கள் காரியத்தை நிறைவேற்றினீர். இனிஸந்தோஷத்துடனே உம்முடைய வைகுண்டத்துக்கு ஏகீர்.

(௩௦) உம்முடையஸாமர்த்தியமும் வீர்யமும் பராக்கிரமமும் நீர் முயன்ற காரியத்தைச் செய்தல்லது நில்லாது. அக்காரியத்தை முடித்தேவிடும். உம்முடைய தர்சநமும் உம்முடைய விஷயமான இந்தஸ்தோத்திரமும் வீணுகாது உடனே பலத்தை யளிக்கும்.

(௩0௧) உம்மிடத்தில் பக்தி செய்தவர்கள் தடையின்றித் தம்கோரிக்கையைப் பெறுவார்கள்.

(௩௧௨) புராண புருஷோத்தமரான உம்முடைய பக்தர்கள் இவ்வுலகினிலும் ஸ்வர்காதிகளிலும் தங்களுக்கிஷ்டமான ஸகல போகங்களையு மநுபவித்துப் பின்பு மோக்ஷத்தில் மஹாநந்தத்தையு மடைவார்கள்.

(௩௨௨) உம்மிடத்தில் பக்திசெய்யச் சக்தியற்ற ஜனங்கள் வேதோக்தமாய், அநாதியாயுள்ளதாய், இப்பொழுது நம்முடைய ஸம்வாதத்தினுல் ப்ரகாசிப்பிக்கப்பட்டதான இந்த ராமஸ்தோத்திரத்தை தினந்தோறும் பாராயணம் செய்கிறவர்கள் இகழ்ச்சியை யடையார்கள்.

ஸ்ரீராமஸ்தவ ஸர்கம் முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌾𑌯𑌣𑍇-𑌯𑍁𑌦𑍍𑌧𑌕𑌾𑌣𑍍𑌡𑍇

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮 𑌪𑌟𑍍𑌟𑌾𑌭𑌿𑌷𑍇𑌕𑌸𑌰𑍍𑌗 𑌪𑍍𑌰𑌾𑌰𑌮𑍍𑌭𑌃.

𑌶𑌿𑌰 𑌸𑍍𑌯𑌞𑍍𑌜𑌲𑌿 𑌮𑌾𑌧𑌾𑌯 𑌕𑍈𑌕𑍇𑌯𑍍𑌯𑌾 𑌨𑌨𑍍𑌦𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 ।
𑌬𑌭𑌾𑌷𑍇 𑌭𑌰𑌤𑍋 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌂 𑌰𑌾𑌮𑌂 𑌸𑌤𑍍𑌯𑌪𑌰𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥௧

𑌪𑍂𑌜𑌿𑌤𑌾 𑌮𑌾𑌮𑌿𑌕𑌾 𑌮𑌾𑌤𑌾 𑌦𑌤𑍍𑌤𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯 𑌮𑌿𑌦𑌂 𑌮𑌮 ।
𑌤 𑌦𑌦𑌾𑌮𑌿 𑌪𑍁𑌨 𑌸𑍍𑌤𑍁𑌭𑍍𑌯𑌂 𑌯𑌥𑌾 𑌤𑍍𑌵 𑌮𑌦𑌦𑌾 𑌮𑌮॥ ௨॥

𑌧𑍁𑌰 𑌮𑍇𑌕𑌾𑌕𑌿𑌨𑌾 𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌾 𑌮𑍃𑌷𑌭𑍇𑌣 𑌬𑌲𑍀𑌯𑌸𑌾 ।
𑌕𑌿𑌶𑍋𑌰𑌵 𑌦𑍍𑌗𑍁𑌰𑍁𑌂 𑌭𑌾𑌰𑌂 𑌨 𑌵𑍋𑌢𑍁 𑌮𑌹 𑌮𑍁𑌤𑍍𑌸𑌹𑍇॥௩

𑌵𑌾𑌰𑌿𑌵𑍇𑌗𑍇𑌨 𑌮𑌹𑌤𑌾 𑌭𑌿𑌨𑍍𑌨 𑌸𑍍𑌸𑍇𑌤𑍁 𑌰𑌿𑌵 𑌕𑍍𑌷𑌰𑌨𑍍 ।
𑌦𑍁𑌰𑍍𑌬𑌨𑍍𑌧𑌨 𑌮𑌿𑌦𑌂 𑌮𑌨𑍍𑌯𑍇 𑌰𑌾𑌜𑍍𑌯𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌰 𑌮𑌸𑌂𑌵𑍃𑌤𑌮𑍍॥ ௪॥

𑌗𑌤𑌿𑌂 𑌖𑌰 𑌇𑌵𑌾𑌶𑍍𑌵𑌸𑍍𑌯 𑌹𑌂𑌸𑌸𑍍𑌯𑍇𑌵 𑌚 𑌵𑌾𑌯𑌸𑌃 ।
𑌨𑌾𑌨𑍍𑌵𑍇𑌤𑍁 𑌮𑍁𑌤𑍍𑌸𑌹𑍇 𑌰𑌾𑌮 𑌤𑌵 𑌮𑌾𑌰𑍍𑌗 𑌮𑌰𑌿𑌨𑍍𑌦𑌮॥ ௫॥

ஸ்ரீ

ஸ்ரீவால்மீகிராமாயணம்-யுத்தகாண்டம்.

ஸ்ரீராமபட்டாபிஷேக ஸர்க்கம்.

(க) ஸ்ரீராமன் நந்திகிராமத்தி லிருக்கும்பொழுது கைகேயிக்கு ப்ரியமான புத்திரனுகிய பரதன் தலைமேலே கையைக் கூப்பிக்கொண்டு வந்து, அமோகமான பராக்கிரமத்தை யுடையராய் தனக்குத் தமையனுன இராகவனைப் பார்த்துச் சொன்னுர்.

